ஒரு வண்ணத்துப்பூச்சியின் சிறகடிப்பில்
எனை மறக்கவும்
ஒரு குழந்தையை மென்மையாகத்
தாலாட்டவும்
என்னால் முடியும்.
குளத்தடி மரநிழலில்
எனது புல்லாங்குழலைத் தழுவும்
காற்றோடு கதைபேச
நான் தயார்.
நிம்மதியான பூமியில் நித்திரைகொள்ள
எனக்கும் விருப்புண்டு
எனது மரத்துப்போன கரங்களுள்
பாய்வது துடிப்புள்ள இரத்தம்.
வெறும் இடியும் முழக்கமுமல்ல நான்
நான் இன்னமும் மரணிக்கவில்லை.

பெயரிடாத நட்சத்திரங்கள்

2017



# பெயரிடாத நட்சத்திரங்கள்

ஊடறு
வெளியீடு

# பெயரிடாத நட்சத்திரங்கள்

ஈழப்
பெண்போராளிகளின்
கவிதைகள்

வெளியீடு
ஊடறு-விடியல்
○
இரண்டாம் பதிப்பு
2017

# பெயரிடாத நட்சத்திரங்கள்

Peyaridaatha Nadchathirangal

(unnamed stars)

இரண்டாம் பதிப்பு

Collection of Poems by 26 Poets

- Women's Writings -

26 போராளிக் கவிஞைகளின்

கவிதைகள்

*Published by*
*oodaru & vidiyal*
*email :*
*udaru@bluewin.ch*
*vidiyal@vidiyalpathippagam.org*

*Vidiyal Pathippagam*
*23/5 A.K.G.Nagar*
*Uppilipalayam Post*
*Coimbatore 6410015, India*

First Edition-2011
Second Edition-2017
*(c) copyright : oodaru*
*Cover art by*
*Nanda Kandasamy (Jeevan)*

*Cover design and Layout*
*by*
*Ravi (Swiss)*

*Printed at*
*Jothy Enterprises*
*Chennai - 600 005*

## நன்றிகள்

இக் கவிதைகளை இடர்ப்பாடுகளுக்கு இடையேயும்
சேகரித்து உதவிய இலங்கை
நண்பர்களுக்கும்
❍
இக் கவிதைகள் வெளிவந்த தொகுப்புகளான
வானதியின் கவிதைகள் (1991)
கஸ்தூரியின் ஆக்கங்கள் (1992)
நிமிர்வு (1993)
வானம் எம் வசம் (1995)
வெளிச்சம் கவிதைகள் (1996)
செம்மணி (1998)
ஆனையிறவு (2000)
என் கவிதை (2000)
எழுதாத உன் கவிதை (2001)
மீண்டும் துளிர்க்கும் வசந்தம் (2004)
பெயல் மணக்கும் பொழுது (2007)
தொகுப்பாளர்களுக்கும்
❍
இத் தொகுப்பை அச்சிடுவது, விநியோகம்
செய்வதுவரையான வேலைகளில் எம்முடன்
கைககோர்த்து நிற்கும் விடியல் பதிப்பகத்துக்கும்
❍
அட்டைப்பட ஓவியத்தை வரைந்து தந்த (ஜீவன்)
நந்தா கந்தசாமிக்கும்
❍
வாசகர்களுக்கும்!

2017

## 26 கவிஞைகள்
## 70 கவிதைகள்

அம்புலி

▼பக்.15-34

நாளையும் நான் வாழ வேண்டும்

நான் எப்பொழுதும் மரணிக்கவில்லை.

வாழ்க்கை ஓர் இனிய பாடலாகட்டும்

எரிமலைக் குமுறல்

தேடி அடைவாய்

ஏ-9 வீதி பற்றிய குறிப்புகள்

தாய் நிலம் உங்களை வரவேற்கின்றது

மீண்டும் துளிர்க்கும் வசந்தம்

அ.காந்தா

▼பக்.35

எந்த மகனுக்காய் என் கால்களை நகர்த்த

அலையிசை

▼பக்.36-41

புரிதல்

என் அகத்தின் பாடலிது

விடுதலைச் சிறகுகளின் காற்றில்

ஆர்த்தெழும்

ஜெயா

▼பக்.42-43

நிமிரும் எங்கள் தேசம்

கலைமகள்

▼பக்.44-45

பயணம் தொடர்கிறது

ஆதிலட்சுமி

▼பக்.46-61

அந்தத் தீபாவளியும் என் அழகிய கிராமமும்

நிழல் விரிக்கும் நினைவுகள்

தொலைந்து போன ஒருவன்

பாரதிக்கு

உங்களுக்காய் நான் உருகித்துடிக்கிறேன்

விழிசொரியும் நீர் துடைத்து

என் இறைமைக்காய் ஊழியென எழுவேன்

மரணங்களையும் வெல்வோம்

கனிமொழி

▼பக்.62

சிநேகிதம் முடியும்

ஞானமதி

▼பக்.63

சமர்ப்பணம்

வானதி

▼பக்.64-72

எழுதாத கவிதை

புறப்பட்டுவா

நாளைய சந்ததிக்கு நடந்ததைக் கூறு

புரட்சிகரா

▼பக்.73

ஓயாத அலை மூன்றில்

கஸ்தூரி

▼பக்.74-86

காலம் அவளது கைபிடித்து நகர்கிறது.

கொழுந்துக் கூடைகள்

வெற்றுடல்களல்ல வெடிமருந்துப் பொதிகள்

சுதந்திரமே

வல்லரசுகள்

இறப்பற்றோர்

கிருபா

▼பக்.87

உயிர்ப்பு

மலைமகள்
▼பக்.88-96
அம்மா
அவள் ஒன்றுக்கும் அசையாள்
உயரும் என் குரல்
எதைத்தான் பாடுவது?
நகுலா
▼பக்.97
பெயரிடாத நட்சத்திரங்கள்
நாமகள்
▼பக்.98-101
காதலின் புதிய பரிமாணம்
யதார்த்தம்
எனது நெருப்பு மேலெழுகிறது
நாதினி
▼பக்.102-103
எழுதாத உன் கவிதை
பிரேமினி
▼பக்.104-105
மீண்டும் ஒரு காலை
பிரமிளா
▼பக்.106-107
உண்மைகளைத் தேடி
ரூபிமார்க்கட்
▼பக்.108-109
அப்புறமாய் வருகிறேன்
பாரதி
▼பக்.110-118
எப்போ விடியும் என் இரவு
நம்பிக்கை ஒளி
கல்லறைக்குள் ஒரு கருவறை
அன்பான அம்மா
சிரஞ்சீவி
▼பக்.119-125
உயிர்க் கூடொன்றில் உறுதியாய் ஒரு வீடு
மாற்றம்
சூரியநிலா
▼பக்.126-131
காலங்களற்ற கடல்
தீயினால் தீயை
மழைக் காலங்கள்
சுதாமதி
▼பக்.132-136
எரித்த நிலத்தில் படரும் வேர்
புதைத்தவரின் புதைகுழி
ஒரு போர்ப் பாடல்
தமிழவள்
▼பக்.137-142
புரிந்துணர்வே அடித்தளமாய்
போராடும் எதுவும் நின்று நிலைக்கும்
கரிப்புமணி நிலம் கைவந்து சேர்ந்தது
தயாமதி
▼பக்.143-144
செம்மணி சிவப்பானது
தூயவள்
▼பக்.145-160
விடைபெறுதல் இல்லாதபிரிவுகள்
உன்னோடு ஒரு நிமிடம்
சோத்தரிசி
எனது வசந்தம்
அழைப்பு
விழிப்பு
அந்நியன் பிடியில் எங்கள் கிராமம்

○○

# ஊடறுப்பு

*எழுதுங்களேன்*
*நான் எழுதாது செல்லும்*
*என் கவிதையை*
*எழுதுங்களேன்!*
*- வானதி*

பல தடவைகள் உட்கார்ந்தும் இதை எழுதுவதற்கான மனநிலை கூடிவரவில்லை. பலவகை உணர்ச்சிச் சுழல்களுக்குள் இக் கவிதைகள் மீண்டும் மீண்டும் அமிழ்த்தியபடியே இருந்தன. மனமும் சமநிலைப்படாது அல்லாடிக் கொண்டே கிடந்தது. என்றாலும் இக் கவிதைகளை எழுதிய போராளிப் பெண்களின் முனைப்பும், எழுத நினைத்து எழுதாது மரணித்த, எழுதமுடியாது இன்று உறைந்து போன -எம் மகள்களின், மச்சாள்களின், அண்ணி சித்திகளின், அக்காதங்கைகளின் பெருத்த மௌனமுமே, இதை எழுதுவதற்காக இன்று எம்மை உந்தித் தள்ளியிருக்கிறது.

இத் தொகுப்பிலுள்ள கவிஞைகள் அனைவரும் முதன்மையாக தம்மைக் களப்பணியில் ஈடுபடுத்திக் கொண்டவர்கள். இவர்களின் கலை இலக்கியப் படைப்புகளும், எழுத்தாக்கமும், இவர்கள் பங்கேற்ற பல்வேறுபட்ட களப்பணி அனுபவங்களின் ஊடாக வெளிப்பட்டவையே. அதனால் இக் கவிதைகளில் இருந்து பீறிடும் உண்மைத்தன்மையும், நேரடித்தனமும், பச்சையான வெளிப்படைத் தன்மையும் ஒவ்வொரு கவிதைக்கும் ஒரு ஆவணப் படத்திற்கான இயல்பைக் கொடுத்திருக்கின்றது.





*ஒளிமுகங்கள்*
*குறிப்பெடுத்துக் கொள்ளும்*
*வினாடிகளில்...*
*அவர்கள் அதிர்வுகளோடு*
*வெளிச்சமாகி இருப்பர்.*
*- அலையிசை*

ஒரு பெட்டைக்கு இந்தச் சமூகம் எப்போதும்போல கீறிவைத் திருக்கும் -வழமையான, சலிப்பான- வாழ்க்கைப் பாதையின் வரைபடத்தைப் பொருட்படுத்தாது, இந்தப் பெண்கள் சாகச மனதோடு பயணித்து, வெளிச்சத் துணுக்குகள் நிறைந்த பல பத்துப் புதிய வழிகளை எமக்காக செப்பனிட்டுத் தந்திருக் கிறார்கள். இன்றுவரை நம் தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் சாகசம்(adventure) குறித்துப் பேசப்படவில்லை. சாகசங் களுக்கு என எந்த ஒரு இடமுமில்லை. நமது சராசரி தமிழ்க் குடும்பங்களிலிருந்து இளம்பெண்கள் வீட்டைவிட்டு வருடக் கணக்கில் -மேற்படிப்பு, வேலை, திருமணம் போன்ற காரணங் களைத் தவிர்த்து- வீட்டுத் தொடர்புகளற்று, வீட்டைத் துறந்து போவது என்பது சாதாரணமான நிகழ்வல்ல. தமிழ்ப்பெண்ணின் வரலாற்றில் இவர்கள் அம் மைல்கல்லை அடைந்திருக்கிறார்கள், அத்தோடு அதை நமக்காக ஆவணப்படுத்தியும் இருக்கிறார்கள்.

*சன்னதம் கொண்ட ஊழிக்காற்றால்*
*சுடர் அணைய*
*செத்தைக் கதவை*
*நீக்கிப் பார்க்கிறேன்*
*தண்ணொளி பரப்பி, மதி*
*கடலிலிருந்து எழுந்து வருகிறது*
*- அலையிசை*

பெண்களுக்காக வரையறுக்கப்பட்ட பல கலாச்சாரத் தடைகளை மீறி போர்க்களம் காணல், தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ளல், உளவு பார்த்தல், பல்வேறுபட்ட நவீன இயந்திரங்களை இயக்குதல், அவற்றைப் பழுதுபார்த்தல், சிக்கலான விடயங்களைத் தீர ஆராய்தல், முடிவுகளை எடுத்தல், இரவுக் காவல்களிலும் பணிகளிலும் ஈடுபடுதல், எல்லைக் காவல், தீவிர உடற்பயிற்சி, இரகசியங்களைப் பேணுதல், வரைபட வாசிப்பில் தேர்ச்சி என பல புதிய பரிமாணங்களை எட்டியிருக்கிறார்கள். இதனால் இன்றைய தமிழ்ப் பெண்களின் அறிதல்களும், தெரிவுகளும் அதிகரித்திருப் பதுடன் நம் பெண்கள் தேர்ச்சி பெற்றுக்கொள்வதற்கான துறை களும் அவை குறித்து இன்றுவரை நிலவும் தமிழ்ச்சமூக மனதின் மௌனங்களும் சுக்குநூறாக உடைக்கப்பட்டிருக்கின்றன.

*கண்ணுறக்கம் தவிர்த்த நடுநிசி*
*எல்லை வேலியில்*
*நெருப்பேந்துகிறது என் இதயம்*
*ஓராயிரம் விழிகளின் உறக்கத்துக்கான*
*என் காவலிருப்பு.*
*- அம்புலி*

மேலும் இக் கவிதைகள் இந்திய அமைதிப் படையின் காலம், இலங்கை-இந்திய ஒப்பந்தக் காலம், ஆனையிறவுச் சமர், 'ரிவிரச' சூரியக்கதிர்ப் படைநடவடிக்கை, ஓயாத அலைகள் பல்கட்ட போர்த்தொடுப்பு நடவடிக்கைகள், செம்மணிப் படுகொலைகள் என வடக்குகிழக்கு இலங்கையின் பல்வேறு நவீன காலத்து வரலாற்றுக் கட்டங்களையும், நிகழ்வுகளையும் பதிவுசெய்துள்ளன.

*நான் உரக்கக் கத்துவேன்*
*புதைக்கச் சொன்னவர் எவரோ*
*.....*
*என் கதறல்*





*செம்மணி வெளி கடந்து*
*பிரபஞ்சமெங்கும் பரவும்*
*...*
*குருதி வழிகையிலும் என்*
*குரல் அதிரும்*
*ஆதிக்கக் கோட்டைகள் உதிரும் வரையில்*
*எனது குரல் உயரும்.*
*- மலைமகள்*

இங்கே நேரடி அனுபவத்தின் மூலம், பட்டறிவின் மூலம் பதிவு செய்யப்பட்டிருக்கும் தமிழ்ப் பெண்களின் கடமைகள், வழக்க மாக தமிழ்ச் சமூகம் அடைகாத்து வைத்திருக்கும் புரையோடிப் போன கட்டுச்செட்டுக் கடமைகள் அல்ல. இப் பெண்கள் மேற்கொள்ளும் செயல்கள் திடமும்,உரமும், ஓர்மமும், ஆளுமை வீச்சும், குறிக்கோளும், நோக்கும் கூடியவை. அவற்றுள் சமூகப் பார்வையும் நிறைந்திருக்கிறது.

*சாக்குத் தொப்பியில்*
*மழைநீர் ஊறி*
*தலையெல்லாம் கனக்க*
*கருவியோடு தானும் நனைந்தே*
*குளிரில் பல் கிடுக்க*
*மரத்தின் மறைவிலிருந்து*
*பகைத்தளம் நோக்கி தன்*
*விழி விரித்த வீரி ஒருத்தி*
*சற்றும் அசைந்தாளில்லை*
*மழை வெள்ளமென்ன*
*பகைவெள்ளம் வந்தாலும்*
*அவள் அசையாள், வெல்வாள்!*
*- மலைமகள் -*

இக் கவிதைகள் பெண் போராளிகளின் போர்க்காலக் கவிதைகள் என்ற ஒற்றைப் பரிமாணப் பார்வையுடைய அணுகுமுறையும், முன் அனுமானங்களும், மனத்தடைகளும், அவற்றின் விளைவாக நீளும் தட்டையான உரையாடல்களும் சலிப்பு மேவிடச் செய்பவை. ஏனெனில் இத் தொகுப்பில் உள்ள கவிதைகள் எம் வாசிப்பில் தோற்றுவிக்கும் அதிர்வுகள் போரியலையும், போரியலை தாண்டிய வெளிகளையும் தொட்டு, பன்முக -சமூக, அரசியல், இலக்கிய, பெண்ணிய- உரையாடல்களையே இங்கு வேண்டி நிற்கின்றன.

*மண் தொட்டு அளைந்து*
*விளையாடாத உங்கள் பிள்ளைகள்*
*எங்கள் மண்ணின் தன்மை பற்றி*
*ஆய்வு செய்யும் காலம் புலரும்.*
*கட்டடங்களும் இயந்திரங்களுமே*
*கதியாகிப் போன நீங்கள்*
*ஆறி அமர*
*முற்றத்து வேம்பு சாமரம் வீசும்.*
*- அம்புலி*

*

*யுத்தப் பிசாசு*
*மரங்களில் இருந்த பூக்களை*
*பிடுங்கி*
*வீதியில் சிந்திவிட்டிருக்கிறது.*
*இனவெறி*
*இலங்கையில் மட்டுமல்ல*
*ருவண்டாவிலும் வீசியிருக்கிறது.*
*- ஆதிலட்சுமி*

துளிர்க்கும் காதலும், தளராத நட்பும், வளர்ப்புப் பிராணி அல்லது பறவைகளோடு வாஞ்சை கொண்டாடுதலும், முதியவர்களினதும்





மூதாட்டிகளினதும் பரிவும், புத்தம் புதுச் சிசுவின் நம்பிக்கை நிறைந்த உயிர்ப்புக் குரலும் இப் பெண்களின் கவிதைகளில் தூவப்பட்டிருக்கின்றன. இவற்றுடன் ‘நாளையும் நான் வாழ வேண்டும்’ என்ற ‘எப்பொழுதும் மரணிக்காத’ நம்பிக்கையைக் கொண்ட இக் கவிதைகள் விடைபெறுதலற்ற பிரிவுகளையும், போரின்மீதான கடும் விசனத்தையும் பாட ஒரு சொட்டும் தயங்க வில்லை என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

*யுத்தம் எனக்குப் பிடிக்கவில்லை*
*குண்டுமழைக் குளிப்பில்*
*குருதியுறைந்த வீதிகளில்*
*நிணவாடை கலந்த சுவாசிப்புக்களில்*
*வெறுப்படைகிறேன்*
*- அம்புலி*

இதுவரை மிக மட்டுப்படுத்தப்பட்ட சுற்றுகளுக்குள்ளும், சிறிய வாசகவட்டத்துள்ளும் வாசிக்கப்பட்ட இக் கவிதைகளை இன்று பெருமுயற்சி எடுத்து மொத்தமாகத் தொகுத்து அளிக்கும்போது தான் இப் பெயரற்ற நட்சத்திரங்களின் வரலாற்று முக்கியத் துவம் வெளிப்படுகிறது. பெயரற்ற நட்சத்திரங்களை ஊடறுவுடன் இணைந்து வெளியிட முன்வந்த விடியல் பதிப்பகத்துக்கும், இத் தொகுப்பின் உருவாக்கத்துக்காக பல்வேறு வகைகளில் உதவிகளைச் செய்த நட்புகளுக்கும் நன்றிகளை இன்று இன அழிப்பிற்கு உள்ளாகிக்கொண்டிருக்கும் தமிழ்ச்சமூகமும், மனித உரிமைகளில் அக்கறைகொண்ட மனிதரும் தெரிவித்துக் கொண்டே இருப்பர்.

- ஊடறு

❍ ❍ ❍

குறிப்பு

❍

இக் கவிதைகள் தனித்தனியாக எழுதப்பட்ட காலம்
பெரும்பாலான கவிதைகளுக்குக் கிடைக்கவில்லை.
அவ்வாறான கவிதைகள் அக் கவிதைகள்
தொகுக்கப்பட்ட முதல் வெளியீட்டின் ஆண்டுகளால்
இங்கு குறிக்கப்பட்டுள்ளன.

❍

கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன.
எந்த மாற்றமும் செய்யப்படவில்லை, சொற்களில்கூட.
(அதற்கான உரிமை படைப்பாளர்களைத் தவிர
யாருக்கும் கிடையாது.) பாவிக்கப்பட்ட
சொல்லாடல்களின் அரசியலில் அல்லது நம்பிக்கைகளில்
எமக்குள்ள முரண்பாடுகளோ உடன்பாடுகளோ
கவிதைகளை தொகுப்பதில் தடையாக இல்லை.

சமர்ப்பணம்

❍

ஈழப் போராட்டத்தால் காவுகொள்ளப்பட்ட அல்லது
அநாதரவாய் விடப்பட்ட எல்லா
பெண்போராளிகளுக்கும்
சமர்ப்பணம்.





## நாளையும் நான் வாழ வேண்டும்

கண்ணுறக்கம் தவிர்த்த நடுநிசி
எல்லை வேலியில்
நெருப்பேந்துகிறது என்னிதயம்
ஓராயிரம் விழிகளின் உறக்கத்துக்கான
என் காவலிருப்பு
நாளையும் நான் வாழவேண்டும்

எனதிழப்பின்
நிரப்ப முடியா இடைவெளி புகுந்து
பகை வரலாம்
புதிதாய் ஒரு புலி
விரைந்து வரும்வரை
இரட்டிப்பு விழிப்போடு காத்திருக்கும்
என் தோழியின் காவலுக்கு
என்னிழப்பு காரணமாயிருக்கக் கூடாது
நாளையும் நான் வாழவேண்டும்.

அம்புலி (~2001)

## நான் எப்பொழுதும் மரணிக்கவில்லை

யுத்தம் எனக்குப் பிடிக்கவில்லை
குண்டுமழைக் குளிப்பில்
குருதியுறைந்த வீதிகளில்
நிணவாடை கலந்த சுவாசிப்புக்களில்
வெறுப்படைகிறேன்
நரம்புகள் அறுந்து தசைகள் பிய்ந்த
மனிதர்களின்
கோரச் சாவு கண்டு என்
மனம் குமுறுகின்றது
துப்பாக்கி முழக்கத்திடையே
விழித்துக்கொள்ளும் ஒவ்வொரு காலையையும்
என்னால் ரசிக்க முடியவில்லை
வசந்தம் கருகிப்போன வருடங்களாய்
விரிந்துள்ளது எம் வாழ்வு.

எப்பொழுதும்
யுத்தம் எனக்குப் பிடிப்பதில்லை
ஆயினும் அதன் முழக்கத்தினிடையே
எனது கோலம் மாற்றமடைந்தது,
கால நிர்ப்பந்தத்தில்.

சிவந்து கனியும் சுடுகலன் குறிகாட்டியூடே
குண்டுகளின் அதிர்வோசை
கேட்காத ஒரு தேசத்தை





இங்கே தேடுகிறேன்.
வெறிச்சோடிப்போன வீதிகளிலும்
முட்புதர் படர்ந்த வயல்களிலும்
மீண்டும் குதூகலம் கொப்பளிக்க
ஒரு மயானத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்ட
மகிழ்வோடு பூரிக்கும்
என் தேசத்தைத் தேடி
கால்கள் விரைகின்றன.

ஆயினும்
ஒரு வண்ணத்துப் பூச்சியின் சிறகடிப்பில்
எனை மறக்கவும்
ஒரு குழந்தையை மென்மையாக
தாலாட்டவும்
என்னால் முடியும்.
குளத்தடி மர நிழலில்
எனது புல்லாங்குழலைத் தழுவும்
காற்றோடு கதைபேச
நான் தயார்.
நிம்மதியான பூமியில் நித்திரைகொள்ள
எனக்கும் விருப்புண்டு.

எனது மரத்துப்போன கரங்களுள்
பாய்வது துடிப்புள்ள இரத்தம்.
வெறும்
இடியும் முழக்கமுமல்ல நான்.
நான் இன்னமும் மரணிக்கவில்லை
எப்பொழுதும்.!

அம்புலி (~1997)

## வாழ்க்கை ஓர் இனிய பாடலாகட்டும்

கருவறை தாண்டி
வரும் என் கண்களுக்குள்ளே
சூரியன் ஒளிவீசப் போகிறான்
புதிதாய் இவ்வுலகைப் பார்க்க
பூரண வளர்ச்சி பெற்றுத்
தயாராகிவிட்டேன் நான்
இன்னமும் முகம் பார்க்காத
எனது தாயினதும்
எனது முதல் எழுத்தை
உரிமையுடன் தர முன்வராத
தந்தையினதும்
என்னை அங்கீகரிக்க முடியாத
இச் சமூகத்தினதும்
விருப்புகளுக்கு அப்பால்





உங்கள் உலகோடு
இணையப் போகிறேன்.
என்னை வரவேற்க விரும்பாத
உங்களுடன் சில வார்த்தைகள்
பேசமுடியாத என் வாயிலிருந்தும்
முற்றும் வளர்ச்சியடையாத
மூளையிலிருந்தும்
எப்படி இந்த எதிர்பார்ப்புகள்
உருவாகி வெளிவந்தன என்ற
ஆராய்ச்சிக்கு அப்பால்
எனக்கும் மனிதம் உண்டென்று
உணர்ந்திடுங்கள்.

கருத்தொருமிப்பும் புரிந்துணர்வுமற்ற
இருவரின் உணர்ச்சிகளுக்கிடையே
நான் உருவாகியிருப்பினும்
என் உள்ளக்கிடக்கை பெரிது.
உவகையுள்ள ஓர் உலகையே
என் கண்கள்
பார்க்கத் துடிக்கின்றன.

அறிவுபூர்வமானது உங்கள் உலகென்று
எனக்குத் தெரியும்.
இப் புவிதாண்டி
அண்டங்களையெல்லாம் அலசும்
வேகம் பெற்றுவிட்ட இந்த
நாட்களின் அவசரத்தில்
வாழ்வின் அடிப்படைத் தத்துவமே
தகர்ந்து
தரைமட்டமாய்ப் போனதேன்?

யுத்தக் களங்கள்
வீட்டிலிருந்து புறப்பட்டு
நாடுகள் உலகமென்று வியாபித்து
ஏன் விரிந்துபோய்க் கிடக்கிறது?
விளங்காத மொழிகளைக்கூட
தெரிந்துகொள்ள முனைபவர்களுக்கு,
துணையானவர்களின் உணர்வுகள் மட்டும்
புரியாமல் போனதேன்?

கடலின் ஆழத்தையும்
இமயத்தின் உயரத்தையும்
இருந்தபடியே
கூறமுடிந்த மனிதனுக்கு
மனங்களின் ஆழம்
எப்படிப் பிடிபடாமல் போனது?
இந் நித்திலம் தாண்டி
மீளச்சென்ற மனிதர்களே
ஏன் உங்கள் காலத்தின்மீது
இன்னமும்
அன்புகொள்ள முடியவில்லை?

என்னை ஈன்றெடுக்கப் போகும் தாயே
எனக்குத் தெரியாத தந்தையே
தொப்புள் கொடியாய்
தொடரப்போகும் உறவுகளே!
உயிர்ப்புக் குரலெழுப்பும்
இச் சிசுவின் மொழி
உமக்குக் கேட்கிறதா?
என் சின்ன நெஞ்சுக்குள்ளே
முகிழ்த்த இவ்





வேதனைக் கொதிப்பு
என் துடிப்பினூடே புரிகிறதா?
உறவுக்கொடி படர்ந்து
முற்றிப் பழுத்த கனியாய்
ஆரோக்கியமாய்
என்னைப் போன்றோரைப் பெற்றெடுங்கள்
பழமையில் ஊறிப்போன தளைகளை
தயைகூர்ந்து எனக்குப் போடாதீர்.

உங்கள் கற்பனையில் உருவகித்த
சிற்பமாய்
எனைச் செதுக்காதீர்.
வாழ்க்கை பற்றிய
புரியாத வேதாந்தங்கள்
எனக்கு வேண்டாம்
கடலைப்போல் விரிந்துகிடக்கும்
இவ் வாழ்க்கைக் களம் நடுவே
நீங்கள் போராடிய
அதே அலைகளோடு
பயணிக்கப்போகும் எனக்குத் துடுப்பாகுக.
புதிதாய் முளைவிடப்போகும் என்
சிந்தனைகளின் வேர்விடலுக்காய்
என்னைப் பண்படுத்துக.
அன்புப் பாலையே
எனக்கு முதலில் ஊட்டுங்கள்
வாழ்க்கை எனக்கோர்
இனிய பாடலாகட்டும்
இசையை நீர் தருக!

அம்புலி (~1997)

## எரிமலைக் குமுறல்

எத்தனை களங்கள் கண்ட
என் கால்கள்
செத்த நிலைபோல
சவமாகிக் கிடக்கிறதே.
கனத்த கருவியை
தோளிலே சுமந்து
தொலை தூரம் எதிரியை
விரட்டிய கரங்கள்
துவண்டு துடிப்பின்றி
கனமிழந்து நிற்கின்றன.

ஏறு நடையாய்
வீறுடன் நடந்தேன்
விண்ணை முட்டிடும்
வேகங் கொண்டேன்
ஒரு நொடிப் பொழுதில்
நாடியடங்கி
கட்டிலே கதியென்று
கலங்கித் தவிக்கிறேன்.

வளையாத பாதை
முடியாத பயணம்
நானோ
முடியாமல் முடமாக!
மண் மீட்க மடிந்தோர்
இல்லத்தில் துயில்கிறார்
சாகாத பிணமாக
நானிங்கு நிலையானேன்.





வல்லூறுகளின் இரைச்சல்
செல்களின் கூவல்கள்
இருப்புக்கொள்ளாமல் என்
இதயம் தவிக்கிறது
வேட்டுச் சத்தங்கள்
கேட்கும் பொழுது
வெகுண்டெழ வேண்டும்போல்,
ஆனால் முடியவில்லை.

என் தோழர் எல்லையில்
துயிலாமல் தூணாக...
நானோ
நள்ளிரவில் தனியாக வெம்புகிறேன்.
உரத்த குரலில்
கானம் பாடுதற்கு
விருப்புக் கொண்டேன்
சத்தம் வரவில்லை.

மடிந்தோரின் முன்னால்
மலரெடுத்து
மண்டியிடக்கூட முடியவில்லை
ஒரு சின்ன ரவையின் தழுவலால்
சலனமின்றிக் கிடக்கிறேன்
ஆனால்
எந்தன் உள்ளக் குமுறல்
எரிமலையின் குமுறலாய்,
ஆழ்கடலின் கொந்தளிப்பாய்
அதனிலும் விட..!

அம்புலி (~1993)

## தேடி அடைவாய்

பசுமைப் போர்வையிழந்து
சாம்பல் கவிந்த
மேனியாயுள்ளேன்
மாரிக் குளிரில் நனைந்திடினும்
தணல் பூத்துக் கிடக்கிறது
எனதுள்ளம்
துன்பத்துக்கும் துயரத்துக்கும் நடுவில்
உன்னை
வாரியணைக்க முடியாத
தாயானேன் நான்.





ஓர் அழகிய காலையை
உனக்கு
காட்டமுடியா வசந்த காலத்தில்
விளையாட முடியாத
பாலைவன நாட்களையே
உனக்குப் பரிசளிக்கிறேன்

எந்நேரமும் வீழ்ந்து வெடித்து
உயிர் குடிக்கும் எறிகணைக்குள்
முகில் கலைத்து வானிரையும்
எமதூதப் பறவைகளின்
வருகைகளுக்கிடையில்
துப்பாக்கி வெடியோசையின்
சத்தங்களுக்கிடையில்
எப்படி என்னால்
இனிமையை உனக்குத் தரமுடியும்

என்னால்
பரிசளிக்க முடியாத வாழ்வை
நீயே சென்றடைவாய்
வழிகளில் சிவப்பும்
இறக்கைகளில் நெருப்பும்
உனக்குச் சொந்தமாகட்டும்
எம்மை வேகவைத்த காலம்
உன்னால் வேகி
சாம்பராகட்டும்
ஒரு புதிய வாழ்வு
உன் கரங்களிலே பிறக்கட்டும்.

அம்புலி (~2001)

# ஏ~9 வீதி பற்றிய குறிப்புகள்

அந்தச் சாலையை நீங்கள்
இப்போது
அழகாய்ப் பார்க்கிறீர்கள்
சொகுசு வாகனங்களும்
தார்போட்ட மவுசுமாய்
கடைகள்
கடைநிறையக் கன பொருட்கள் என
கலகலத்துக் கிடக்கிறது
அதிகாரக் கனவோடு
வர முனைந்தவர்களையெல்லாம்
திருப்பி அனுப்பி
அன்போடு வருபவர்களை மட்டும்
அரவணைத்துக் கொள்கிறது.
இனி அந்த வழி நெடுகிலும்
ஆனந்தப் பயணங்களே
தொடர்வதான கனவு.

எனக்கு அவ் வீதியின்
வர்ணங்களெதுவுமே தெரிவதில்லை
முன்பு எப்படித் தெரிந்ததோ
அப்படியே
புற உருவத்தை ஊடுருவி
என்புருவைக் காட்டும்
‘எக்ஸ்றே’ படங்களைப்போல்
இந்த வீதியின்
சில வருடங்கள் முன்னான
காட்சிகளே
கனவிலும் வருகிறது.
மண் அணை, பதுங்குழி
ஷெல் மழை





இடிந்து சிதைந்த கட்டடக் குவியில்
அதன் நடுவே அமிழ்ந்திருக்கும்
ஊரின் வாழ்வு
இவ் வீதிக்காய் உயிர் சிந்திய
விழுப்புண் பட்டும் மீண்டும் மீண்டும்
களத்துத் தோன்றிய
என்னினிய தோழிகள்
அரக்கரைச் சுமந்து வந்து
ஓர் அங்குலம்தானும் அரக்கமுடியாமல்
அவ்விடத்திலேயே
புதைந்துபோன டாங்கிகள்
குண்டும் குழியுமாய் கற்கள் சிதறி
மரங்கள் முறிந்து
பற்றை படர்ந்து
கண்ணிவெடி தாங்கிய
அவ் வீதியின் தோற்றமே
நினைவில் நிற்கிறது.

காலம் ஆற்றமுடியாத வலியாய்
இக் காட்சிகளே என்னுள்
பதிந்து போயின.
என்னுள் எவையும்
இவ்வீதியில் இப்போது எவையும்
இருக்கலாம்
ஒன்று மட்டும் நிச்சயம்
என்னுள் பதிந்த இக் காட்சிகளே
இன்றைய இவ் வீதியின்
மகிழ்வின் உயிர்நாடி
அன்றைய தவக்கோலமே
இன்றைய நிம்மதிப் பயணம்!

அம்புலி (~2004)

## தாய் நிலம் உங்களை வரவேற்கின்றது

தீயெரித்த காலத்துக்குப் பயந்து
தீயணைக்க மனமின்றி
தயங்கி, குஞ்சுகளை
திக்கொன்றாய் அனுப்பின
தாய்ப்பறவைகள்
தேடிவந்த தேட்டமனைத்தும் கொடுத்து
காணியை பூமியை, காதுத் தோட்டை
ஈடுவைத்து
உலகத் திசையெங்கும்
தம் பலமெல்லாம் திரட்டி
பறக்க வைத்தன.

இழுவை வண்டிகளில்
மூச்சடங்கிச் சாகும் பயம் மறந்து
சோதரிகளின் வாழ்வுக்காய்
தேய்ந்து போயின
ஆண்மக்கள் வாழ்வு.
குடும்ப பாரம் சுமப்பதற்கு
முதுகு நிமிர்த்தி
எண்ணெய் வளநாடுகளின் வீடுகளில்
ஓடாய்த் தேய்ந்தது
பல பெண்கள் வாழ்வு.

கழிப்பறைக்கு நீர் சுமக்கவும் மறுத்த
தம்பியின் வாழ்வு
குளிர் பனிக்குள்
கழிப்பறைத் தூய்மையிலேயே கரைந்தது.
“திண்ட கோப்பை கூடக்





கழுவத் தெரியாத பிள்ளை’
’ரெஸ்ரோரண்டில்’
அதைக் கழுவிப் பிழைத்தே
காசு அனுப்பியது.
ஊரில் தெருவுக்கொன்றாய்
பிரித்து வைத்த பாகுபாடெல்லாம்
சிதைந்து
யாவரும் எத் தொழிலும் செய்யும்
புதிய சமத்துவம் கிடைத்தது
அவ் வாழ்வில்.
ஏற்றத்தாழ்வு, வரட்டுக்கௌரவம் உடைந்து
’மாப்பிள்ளை’ வெளிநாடெனில்
பெண் கொடுக்கும்
நாகரிகம் மலர்ந்தது.

இடப்பெயர்வு, இன அழிப்பு
சீதனம், அவல வாழ்வு
யாவும் துரத்தியதால்
உலக திசையெங்கும் பரந்த
பிள்ளைகளின் பிள்ளைகள்
தமிழ் தெரிந்தும் தெரியாமலும்
ஊர் உறவுகள் அறியாமலும்
வாழ்கின்ற வாழ்வறிந்து
தவிக்கிறது தாய் மண்.
பேரப்பிள்ளைகளின் முகம் காணாது
சாகமுடியாமல் அந்தரிக்கின்ற
பாட்டிக் கிழவியின் முணுமுணுப்பு
வீட்டினுள் கேட்கிறது.

“காலம் சுலபமாய் விட்டது
யாவரும் எங்கும் போகலாம்
ஊருக்கொருமுறை வரலாம்தானே”

❍ ஊடறு

என்று இலகுவாய் சொல்லிவிட
எம்மால் முடியவில்லை
வெறும் 'காசுமரமாய்'
உமை நினைத்து 'அனுப்புங்கள்'
என்றெழுத இயலவில்லை.

அப்பிள் கனிபோல
சிவந்த உம் முகத்துள்ளும்
வான்தொடும் கட்டடத்தை
பின்னணியாய்க் கொண்ட
புகைப்படத் தோற்றத்தினுள்ளும்
தொலைபேசியில் கேட்ட
இனிய குரலுள்ளும்
வெளித்தெரியா கடிகார வாழ்வு
எம் மனதுள் தெரிகின்றது.
முன்பு ஊரிருந்த வாழ்வு தொலைந்ததால்
விடுமுறையிலேனும் நீங்கள்
வீடு வரமுடியாதபடி
'பாதுகாப்பான' வாழ்வை
சுமந்துள்ளோம் நாம்.

உயிர் உறையும் பனியுள்ளும்
வியர்வைப் பூக்கள் மலர
ஓயாதுழைக்கும் குஞ்சுகளே
எம் தேசத்துக்காய் தூரவிருந்து
குரலை உயர்த்தி
கரத்தையிணைத்து
துணையிருக்கும் உறவுகளே
உயிர் சிந்தி, உதிரம் சிந்தி
செவ்வான் எழுந்த கதிரை
வரவேற்கக் காத்திருக்கும் காலையொன்றில்
உங்கள் வரவைப் பார்த்திருப்போம்.




ஊர்ச் சுடலையில் உடல் வேகும்
இறுதிக் காலமொன்று
கட்டாயம் இங்கிருக்கும்.

மண் தொட்டு அளைந்து
விளையாடாத உங்கள் பிள்ளைகள்
எங்கள் மண்ணின் தன்மை பற்றி
ஆய்வு செய்யும் காலம் புலரும்.
கட்டடங்களும் இயந்திரங்களுமே
கதியாகிப் போன நீங்கள்
ஆறி அமர
முற்றத்து வேம்பு சாமரம் வீசும்.
'ஈழத்து அகதி' என்ற
அவலம் சுமந்த வாழ்வு
அழிந்தொழிந்து
ஈழத்து மானுடர் என்ற மதிப்போடு
உலகெல்லாம் வலம் வருவோம்.

தாயக வாசலிற் பூந்தளிர்களோடு
காத்திருக்கிறது இளங்காற்று.
வேளைவரும்போது
மண்ணின் மணம் நுகர வாருங்கள்
அதுவரை
கரங்களால் ஒன்றுபட்டிருங்கள்
குரல்களால் இணைந்திருங்கள்
மனங்களால் அருகிருங்கள்
தமிழீழத் தாயகம்
எங்களனைவர்க்கும்
சொந்தமானது, உரிமையானது
அதுவே அழகானது!

அம்புலி (~2003)

## மீண்டும் துளிர்க்கும் வசந்தம்

வலிக்கும் என் விழிகளில்
வடியும் உதிரக் கண்ணீரின்
உணர்வறியாதோரே,
எனது ஆன்மத்துள் ஒன்றிய
விடுதலைக் கனவின்
வியாபகம் புரியாதவரே,
எனது துயரப் பாட்டொலி
கேட்காத திசைகளே,
நீண்டு பரந்த சமுத்திரப் பரப்பை
தாண்டிவரும் என்
உணர்வுகள் தெரிந்திடுக
கொதிப்பிடை வேகினும்
குரலுயர்த்தும் என் கொந்தளிப்பறிக.

எனக்காய் இரங்குமாறும்
கண்ணீர் வடிக்குமாறும்
யாரையும் நான் கேட்கப்போவதில்லை
பாவப்பட்ட உயிரென்றெனக்குப்
பிச்சையளிக்க முன்வராதீர்
வீண் கழிவிரக்கத்தில் என்னை
புரிந்துகொள்ள முயலாதீர்
எனது சுயத்தை அறிக.

வற்றாத வளத்துடன்
எனக்கென்றோர் வாழ்வு இவ்
வையகத்தில் இருந்தது
யாரையும் பற்றியிருக்காச்
சீவியச் செழிப்பில் வாழ்ந்த





தடயங்கள் இப்போதும் உண்டு.
மானம் பெரிதென மதித்த
மாண்பு எனது மரபு
உமைப்போல் தலைநிமிர்த்தி
மீண்டும் இங்கு
வாழ்வதற்காய் எழுகின்றேன்.

அதிர்வுகளுக்கு நடுவிலும்
தளம்பலின்றித் தடைப்படாமல்
எனது பயணம் தொடர்கிறது
அக்கினிச் சருகுகளின் மேல்
அயர்ந்துறங்கினும்
இமைகள் சேர மறுத்த இரவுகளிலும்
ஓர் இனிய வாழ்வே
கனவாய் விரிகிறது
தடைப்பட்டுப்போன குருதிக் குழாய்களில்
நெருப்பை நிரப்பியுள்ளேன்
வேதனைகளில் இருந்து
வெளிப்பட்டவையெல்லாம்
என்னுள் புதிய வீச்சுக்களாயின

எல்லாம் முடிந்துவிட்டது என
எண்ணியிருந்தபோது தான்
மீண்டும் புதிதாய்
சுவாசிக்கத் தொடங்கினேன்
பட்டுப்போன இடத்திலிருந்து
வேர் பாய்ச்சினேன்
புதுவிதையாய் முளைவிடுவேன்
சிதைவுகளில் முகம் துளிர்ப்பேன்
புதைக்கப்பட்ட இடத்திலிருந்து

மீண்டும் பிறப்பெடுப்பேன்
துடிப்பற்று நின்று போகவில்லை
என் இதயம்
பூமிசுழற்சியில் புதிய குழந்தையாய்
பிறப்பெடுக்கப் போகும் என்னை
வரவேற்றுக் கொள்ளுங்கள்
அஞ்சியும் கெஞ்சியும்
பணிந்தும் குனிந்தும்
வாழ்வதல்ல என்விதி

எனக்குத் திணிக்கப்பட்ட
வாழ்வைத் திருத்தி
புதிதாய் எழுதும் கதையைப் படியுங்கள்
சாக்குரலின் மத்தியிலும் எழுதப்படும்
இச் சரிதத்தை அறியுங்கள்
சூரியன் பூக்கும் வானத்தில்
இருள் பரவி அழுத்துகையில்
முகில்களைக் கிழித்தெறிந்து
கதிரவனைக் கூட்டிவர
எனது கரங்கள் புறப்பட்டுவிட்டன.

வெறும் கற்பனையில் விரிந்ததல்ல
என் கனவு
நம்பிக்கை தரும் ஒளியில்
தொடர்கிறேன் பயணம்
மீண்டும் துளிர்க்கும் வசந்தம்
புதியதோர் வாழ்வு
எனக்கெனப் புலரும்.

அம்புலி (~2004)

❍ பெண்போராளிகளின் கவிதைகள்



## எந்த மகனுக்காய் என் கால்களை நகர்த்த

அவனை விதைத்த
அடுத்த கணமே
அதோ
அடுத்துள்ள கல்லறை நோக்கி
ஓடின கால்கள்
கண்ணீர்ப் பூக்களை
தூவின கைகள்

அவன் விதைகுழிக்கு
மண்ணிட்ட கரங்கள்
அனைத்துமே
தத்தம் மக்களுக்குமாய்
மண்ணிட்டிருந்தன

எந்த மகனுக்காய்
என் கால்களை நகர்த்த?
நேற்று விதையுண்டு போன
மூத்தவனுக்கா? இல்லை
இப்போதுதான்
விதைக்கப்பட்ட என்
இளைய குஞ்சுக்கா?

அ.காந்தா (~2001)

❍ ஊடறு

## புரிதல்

கரிய இருட்போர்வையால்
புவி போர்த்தப்பட்டிருக்க
இரையும் உயிரினங்களின்
சலனங்கள் ஒடுங்கி
நிசப்தமாகும் புவி மேற்பரப்பில்
வெற்றுக் கோதாக நான்.
புதிய தாள்கள் என்
முன்னே விரிந்திருக்கின்றது
செத்தையூடே சொல்லாமலே
நுழையும் காற்று
உடலோடு சல்லாபிக்க
நான் விழித்திருக்கின்றேன்

வெறுமை மனதோடு
மை எடுத்து
வட்டம் சதுரமென
குறுக்கும் நெடுக்குமாய்
தாள்களை நிறைக்க
உற்று நோக்குகிறேன், அவை
யதாத்தத்தையும் வரியாக்கின

சன்னதம் கொண்ட ஊழிக்காற்றால்
சுடர் அணைய
செத்தைக் கதவை நீக்கிப் பார்க்கிறேன்
தண்ணொளி பரப்பி, மதி
கடலிலிருந்து எழுந்து வருகிறது.

அலையிசை (~2001)





## என் அகத்தின் பாடலிது

கூடு கட்டி
குஞ்சு பொரிக்கும் கனவுகளிடை
மலர்ந்த உயிர்
காணாமல் போன துக்கங்களோடு
உருவினை நினைத்திருக்குமென்
அகத்தின் பாடலிது.
சன்னதங்கள் உருப்பெற்று, சத்தங்கள்
ஓயாது எதிரொலிக்குமோர் பொழுதில்
உயிர் மறைந்து போனது.

அகவைகள் மிகையொலி வேகத்தில்
மூப்பெய்த
அவர்கள் சிறகு விரித்தனர்
தமக்கான நோக்குகளில்
ஒளி பொருத்தினர்
உயிரின் செயல்கள், அவர்கள்
மனங்களிடை பத்திரப்படுத்தப்பட்டுள்ளது.

மௌனமாக என்
மன இடுக்குகளில் பதியப்பட்டுள்ள
உயிரின் உணர்வுகளோடு ஒன்றிப்போக
வாழ்வு நகர்கிறது
இமைப்பொழுதிலும்
ரணமாகும் உயிரின் நிதர்சனத்தை
என் அகம், பாடலாக
என்றுமே இசைத்துக் கொள்ளும்.

அலையிசை (~2001)

## விடுதலைச் சிறகுகளின் காற்றில்

'அலை' உரசிய வீச்சில்
உயிர்த்தது
உணர்வின் கொம்புகள்

கனத்துக் கிடக்கும் அவர்களின்
இதய மையத்துள்
தாழமுக்கங்கள்
கணத்துக்கு கணம் வேறாகின.

அலையுயர்த்திய நுனியில்
பாய்ந்த படகுகள்
கடல்களைத் தாண்டி
கரையேறிய விநாடியில்
நிகழ்வுலகை விழிக்குள் இடுக்கி
அவர்கள் தேடிய தடயங்கள்
புலப்படாத நிஜங்களாகின.

வாழ்வுப் படிம அத்திவாரங்களின்
வேர்களை





கறையான்கள் அரித்திருந்தன
எஞ்சியவைகளில்
அவர்களின் ரேகைகள்
உருவேறிய மனங்களின் தாண்டவங்கள்
அரங்கேறத் துடித்தன.

உப்புக் காற்றைத் தழுவிய சாலை
ஆக்கிரமிப்புச் சின்னங்களை தாங்கிய பூமி
உலகறிய கூவும் பிரச்சார விளைநிலம்
வெறித்தனத்தின் உச்சம் சிதற
விழித்திருந்தது.

வரைபட மையங்களில்
உப்புமேனியின் உயிர் வாழ்விற்காய்
எல்லைகள் அகன்று கொண்டதால்
பிடிமானங்களற்று ஏதிலிகளானதன்
நினைவுக் கீற்றுகள்
தாண்டவங்களின் விழிகளை
தீக்கிரையாக்கின.

இரும்புப் பாதங்களின்
கனத்த பதிவுகளைத் தாங்கிய பூமி
விடுதலைச் சிறகுகள்
விசிறிய காற்றில் சிவந்து போனது.
வெண்நுரைக் குவியலும்
வாசல் திறவுகோலும் என்றும்
அவர்களுக்கு உரியதென
செங்கொடி சாட்சி சொல்கிறது.

அலையிசை (~2000)

## ஆர்த்தெழும்

வடிவங்கள் மாறும்
முகில்களின் யாத்திரைகளோ
சற்றுரசி உயரும்.
அலைகளின் வேகங்களோ
பரவையில் மூசி எறிக்கும்
ஆதவனின் தாக்கங்களை
அவர்கள்
கணக்கெடுத்துக் கொள்வதில்லை.
''அவர்கள் நோக்கு ஒன்று தான்''





சூனியத்துள் உறைந்து
எல்லைகளற்று விரிந்து
சமுத்திரங்களோடு, கண்டங்களையும்
இணைக்கும் இந்துமா கடலின்
ஓர் மூலையில்
நம்பிக்கை பெருகிய
ஒளி முகங்கள்
அவர்களின் வரவிற்காய்க்
காத்திருக்கும்.

இணைவிற்கு கணங்களை
ஒளிமுகங்கள்
குறிப்பெடுத்துக் கொள்ளும்
வினாடிகளில்...
அவர்கள் அதிர்வுகளோடு
வெளிச்சமாகி இருப்பர்.

மௌனமாக
ஒளி முகங்கள் தமக்குள்
குமுறிக் கொள்ளும்.
என்றுமே துலங்க முடியா
கரிய உருக்களாய்
ஆழியின் ஆழத்துள் உறைந்துபோன
நிஜங்களைச் சுமந்து
நாளும் அலைகள் ஆர்த்தெழும்.

அலையிசை (~2001)

## நிமிரும் எங்கள் தேசம்

நேற்றோர் நீள் இரவில்
விழி கனக்க
கால் கடுக்க
ஆழ்கடலின் நீள்கரைப் பரப்பில்
நண்டு வந்து வளை அமைத்து
ஒடுங்குகின்ற மணற்பரப்பில்
அரண் அமைத்து
எதிரி வரவை எதிர்நோக்கி
நிலையெடுத்து நின்ற வேளை





நடுங்குகின்ற பாதங்கள்
நிலம் தொட மறுக்கின்ற
நிலைமையையும் பாராது
ஒடுங்குகின்ற நிலைவெறுத்த
ஓர் அன்னை மூதாட்டி
அவள் அருகில் வந்து கேட்டாள்,
''பிள்ளைக்கு சாப்பாடு வேளைக்கு வந்ததுவோ?
சோறும், புளிமாங்காய் போட்ட
சிறுமீன் குழம்பும்
நான் தரட்டோ? வாங்கோ'' என்று நின்றாள்

"நாளைக்கு நானிந்த மண்ணில்
நாறிப்போகாமல் என்
வீட்டில் தலைசாய
சுடுகாட்டில் நான் வேக
இன்றைக்கு வாழுகின்ற சித்திரங்களே
போங்கோ, போய்க் கொஞ்சம் காலாற இருங்கோ
பானையில்லை, சட்டியில்லை
இருக்கிறதெல்லாம் உங்களுக்கே
மீதமில்லாமல் ஒரு வழி பாருங்கோ
இமைக்க மறந்திருந்த விழிமூடி
கொஞ்சம் படுத்திருங்கோ
பொழுது விடிகின்ற வேளைவரை
நான் பார்ப்பேன், போங்கோ'' என
அவள் தலையைக் கோதிவிட்டாள்
தேசத்தின் வருடலில்
அவள் சிலிர்த்தாள்
தேசத்தின் உறவில் நிமிர்ந்தாள்.

ஜெயா (~1993)

## பயணம் தொடர்கிறது

நேற்றுவரை கண்ணெதிரே நின்று
கதைபேசி
சிரித்த முகம் இன்று
காவியமாய்ப் போனது.
நிஜமும் நிழலாகிப் போக
நீங்க முடியா நினைவுகளால்
நிறைக்கப்பட்ட
இதயத்தின் விழி வழியே
வழிகிறது
நினைவின் துளிகள்.





தோழனே நேற்று நீ,
இன்று நான்.
சூடாக்கப்பட்ட சுவாசப்பை
வெம்மையான பெருமூச்சை
குமுறி உமிழ்கிறது
உப்புநீர் உதட்டினை ஸ்பரிசிக்க
மீட்சி பெறுகின்ற என்
உணர்வுகளில் உறுதி பிறக்கிறது
சற்றுத் தூரத்தை
உற்றுப் பார்க்கிறேன்
சலனமற்று சாவை எதிர்பார்த்து
எனக்காகக் காத்திருக்கிறது
பகைவீடு.

கண்மூடி ஒரு கணம்
விழிகசிய விடைகொடுத்த தலைவனை
நினைத்து மீள்கின்றேன்
மீண்டும்
தோழனே, என் கண்களுக்குள்
உன் முகம் சிரிக்கிறது
இன்னமும் இரண்டு மணித்துளிதான்
நேற்றைய உன்னைப் போல்
இன்று உன்னருகில் நான்,
கந்தகச் சுமையை கட்டியணைத்தபடி
உன் தடம்பட்ட மண்ணெடுத்து
முத்தமிட்டு
இலக்குநோக்கி தொடர்கிறது
என் பயணமும்!

கலைமகள் (~2001)

## அந்தத் தீபாவளியும் என் அழகிய கிராமமும்

1987 நொவம்பர் 22
பனிநீரில் குளித்து
பச்சைப் பட்டாடை உடுத்து
புதுமணப்பெண் போல்
பூரித்து நிற்கிறது என் கிராமம்.
காகங்களும் குருவிகளும்
காதோடு காதுவைத்து
ஏதோ பேசிக் கொள்கின்றன
மரங்கள் மூசிமூசி மறுக்கின்றன

இடுகாட்டிலிருந்து
இரவல் வாங்கிய அமைதியை
கவசவாகன உறுமல்கள்
சிதைக்கின்றன
யுத்த நெடி
மனித முகங்களில் அறைகின்றது
இந்தியா என்கின்ற இமாலயம்
எங்கள் மனப்பரப்பில் இடிந்து
நொருங்குகின்றது.





என்னவென்று அறியாமல்
முற்றத்துக்கு ஓடிவந்த அம்மா
குண்டுபட்டு வீழ்கிறாள்
அதைப் பார்த்து
அலறிய தம்பிக்கும் சூடு.
அப்பாவோ
வயலில் வியர்வை குளித்தபடி.
எங்கள் வீட்டில் குருதிச் சேறு
அயல் வீட்டிலும் அதற்கு
அடுத்த வீட்டிலும் அப்பாலும்
அவலக் குரல்கள்.

எங்கள் கிராமத்தில்
இனிய வசந்தங்கள் கருகின
பூட்ஸ் கால்களின் கீழ்
புனிதங்கள் நசிந்தன
வியர்வை முத்துக்கள் சிந்தி
விளைவித்த நெல்மணிகள்
முற்றமெங்கும் சிந்தின
விழுந்து கிடந்த மலர்களை
இரும்புச் சக்கரங்கள் மிதித்தன

சிதறிய உடல்களும்
சிந்திய இரத்தமுமாய்
இரவு சூழ்ந்தது
தூரத்தே துப்பாக்கிகள் வெடித்தன
அன்றைய நாள் அகல
விடியலின் குறிகள் தோன்றின!

ஆதிலட்சுமி (~1998)

❍ ஊடறு

## நிழல் விரிக்கும் நினைவுகள்

அந்தப் புளியமரத்தடியில்தான்
ஐஸ்கீறீம் விற்கும் தாத்தா நிற்பார்.
முன்னால் விரிந்திருக்கிறதே
மைதானம் - அங்கேதான்
நாங்கள்
புழுதி குடித்து விளையாடுவோம்.
மைதானத்தின் வடமேற்கே
மூலையில் உட்கார்ந்திருக்கிறதே
வைரவர்சூலம் - அதற்கு முன்னால்தான்
செருப்புக்களை கழற்றி வைப்போம்,
பாதுகாப்புக்காக.





புத்தகப் பையை
புளியங்கொப்பில் கட்டித்
தொங்க விடுவோம்.
மைதானத்துக்குள் புல்லுமேய
வரும் பசுக்களை
கல்லெறிந்து கலைப்போம்.
எல்லாவற்றையும்
மௌனமாகப் பார்த்திருக்கும் சடமாக
பாடசாலைக் கட்டிடம்
ஊரில் காசுசேர்த்து
ஒருமாடி எழும்பியபடி நிற்கும்
அரைகுறை உருவம்.

இங்கேதான்
இந்தியன் ஆமி குடியிருந்தது
கதிரை, மேசை
கதவு, ஜன்னல் எல்லாம் உடைத்து
சப்பாத்தி சுட்டது.
பள்ளி வளவில் உயர்ந்து நின்ற
தென்னைகளைத் தறித்து
வீதிக்குத் தடையாய்ப் போட்டது.

எல்லாம் இப்போது கனவாய்!
எனது நண்பர்களில் பலர்
களத்தில்
சிலர் கல்லறையில்.
நான் மட்டும்
கையில் பேனாவுடன் கவிஞையாய்!

ஆதிலட்சுமி (~1998)

## தொலைந்து போன ஒருவன்

அந்தி சாயும் வேளை
இடியோசை போன்று எழுந்த
சத்தத்தில் இந்த
மண்ணின் துணிக்கைகள்
அதிர்ந்து போயின.
சிலமணி நேரங்கள்
சின்னதாய்த் துப்பாக்கிச் சூடுகள்





இதயங்கள் எல்லாம்
ஏக்கத்தின் பிடிக்குள்
சிக்கிச் சிலிர்த்தன
சில கணங்களில்
துயரக்கடலில் மூழ்கிக் கிடந்த
தெருவை உசுப்பி மறைந்தது
அம்புலன்ஸ் வண்டி.

கண்சிமிட்டும் தாரகைகள்
கண்ணயர்ந்து கொள்ள
நிலவை இழந்து
நிர்மூலமான வானமும் மெதுவாய்
நித்திரை செய்தது
மரங்கள் விறைத்துப்போய்,
காற்றும் காயப்பட்டு
கனமாய்
இரவு கழிந்தது

புலர்ந்த பொழுதில்
பறவைப் பாடகர்களின்
பூபாள இசை இல்லை
வீதி மருங்குகளில்
புதிதாய் முளைத்திருந்த
வாழையின் இலைகள்
சோகமாய் அசைந்தன.
புரிந்தது
சுதந்திரத்துக்காய் தேசம்
ஒருவனைத் தொலைத்துவிட்டது.

ஆதிலட்சுமி (~1992)

## பாரதிக்கு

பாரதி உன்
பாட்டைப் படித்துதான் இவள்
பைத்தியமாகிப் போனாள்.
நேர்கொண்டு பாரென்றாய்
நிமிர்ந்து நடவென்றாய்
நடைமுறைப்படுத்திய போது
சமூகம் இவளை
நேர்மையற்றவள் என்றது.





பாரதி நீ
சிறுமைகளைக் கண்டால்
சீறு...காறு... என்றாய்
சீறியபோது சமூகம் இவளை
சினத்தது.
பெண்ணினத்தைச் சீரழிக்கும்
பேடிகளைக் கண்டு இந்த
குஞ்சுப் பாஞ்சாலி
குரல் கொடுத்த போதெல்லாம்
பாண்டவர்களே இவளைத்
தூசித்தார்கள்.

காசு பெரிதில்லை
நெஞ்சிலுள்ள காதல் பெரிதென்றாய்.
இங்கோ கண்ணன்கள்
காசு பெரிதென்று
காதலை முறிக்கிறார்கள்.

பாரதி நீ
சுதந்திரத்துக்காய்ச் செக்கிழுத்த
வ.உ.சியை வாயார வாழ்த்தினாய்
இங்கோ
செக்கிழுப்பதற்காக சில வ.உ.சிகள்
சுதந்திரத்தை மறந்து
சீமைக்கு ஓடுகிறார்.
பாரதி உன்
பாட்டைப் படித்துத்தான்
இவள் பைத்தியமாகிப் போனாள்.

ஆதிலட்சுமி (~1993)

## உங்களுக்காய் நான் உருகித்துடிக்கிறேன்

யுத்தப் பிசாசு
மரங்களில் இருந்த பூக்களை
பிடுங்கி
வீதியில் சிந்திவிட்டிருக்கிறது.
இனவெறி
இலங்கையில் மட்டுமல்ல
ருவண்டாவிலும் வீசியிருக்கிறது.

சிறகுகூட முளைக்காத சிட்டுகளை
வீதியில் விட்டெறிந்திருக்கிறது
அம்மா முகம் தவிர
அடுத்த முகம் தெரியாத பிஞ்சுகளை
அனாதைகளாய்
அலைய வைத்திருக்கிறது

குஞ்சுகளே! உங்கள்
கூடுகலைத்த குரங்கு எது?
அஞ்சி அஞ்சி நீங்கள்
அழுது துடிப்பதனை
எண்ணிப் பார்க்க எந்தன்
இதயம் வலிக்கிறது





மொழி வேறு என்றாலும்
எங்களுக்கும் உங்களுக்கும்
மூச்சு ஒன்றுதானே.
அகதிமுகாம் வாசலிலே
அம்மாவைத் தேடு என்று
ஐ.நா கூறியதாமே!
யாரைப் பார்த்தாலும்
அம்மாவாய்த் தெரிகிறதா?
சின்னவயதில் உங்கள் தோள்களிலே
சிலுவையை ஏற்றிவைத்தது யார்?

உங்களது பஞ்சுக் கன்னங்களில்
கண்ணீர் வடிகிறதாம்
ஓடிவந்து துடைப்பதற்கு என்
உள்ளம் துடிக்கிறது
ஆனால் என்
கைகளுக்கு நீளம் போதவில்லை.
பாயில் சரிந்து
தூங்க முயல்கையில்
பால்வடியும் உங்களது பூமுகங்கள்
தோன்றி என்
நித்திரையை விரட்டிவிட
நிம்மதியற்று
எந்தன் நினைவு அலைகிறது
பிஞ்சுகளே!
உங்களுக்காய் நான்
உருகித் துடிக்கிறேன்
வேறென்ன செய்வேன்?

ஆதிலட்சுமி (~1994)

## விழிசொரியும் நீர் துடைத்து

அம்மா கிருஷாந்தி!
உனக்கு நடந்ததை எண்ணும்பொழுது
அடிவயிறு துடிக்கிறது
அக்கினி பிறக்கிறது.
தமிழர் வாழ்வு
வளம் கொழிப்பதாய் அரச வானொலியும்
பத்திரிகைகளும் புளுகிக் கொண்டிருக்க
வலிகாமத்தில் உன்
வாழ்வு பறிக்கப்பட்டிருக்கிறது
உயிர்வாழும் உரிமை மறுக்கப்பட்டிக்கிறது.

நினைவிருக்கிறதாம்மா
கொஞ்ச நாட்களுக்கு முன்
கிணற்றுக்குள் தவறிவிழுந்த ஆசிரியையை
இராணுவம் காப்பாற்றியதாம்
இப்போது அதே இராணுவம்தான்
உரும்பிராயில் ரஞ்சனியை
கோண்டாவிலில் ராஜினியை
கைதடியில் உன்னை





காடைத்தனம் புரிந்து
கொன்று புதைத்திருக்கிறது.
பாலியல் வன்முறைக்கு
இரையான
பள்ளிக்கூட மாணவி நீ
உன்னைச் சூழ்ந்து நின்று
மிருகங்கள் சுவை பார்த்து
சிரித்த பொழுது நீ
சத்தமிட முடியாமல்
சாவோடு போராடினாய் - உன்
விழிகளிரண்டும்
வான்நோக்கி நிலைத்தபோது
என்னம்மா நினைத்திருப்பாய்?

உன் கொலைக்கு காரணமாய்
இராணுவ சதியென
சுலபமாய்ச் சொல்கிறார்கள்
உண்மை அதுவல்ல என
உனக்குத் தெரியும்
உலகுக்கும் தெரியும்
உண்மை ஒருபோதும்
புதைகுழிக்குள் உறங்காது
பிய்த்தெறியப்பட்ட புதுமலரே
விழிசொரியும் நீர் துடைத்து
வீரம் பெறுகின்றோம்
அரச பயங்கரவாதத்தின் அடிமைகளல்ல
நாம் என்று
அவர்கள் உணர்ந்து கொள்ளட்டும்!

ஆதிலட்சுமி (~1997)

## என் இறைமைகளுக்காய் ஊழியென எழுவேன்

நிலவு
நிர்வாணமாக நீந்திக்கொண்டிருக்கிறது,
நிழல் பூசி தன்னை
உருமறைப்புச் செய்தபடி.
நீள்தவம் செய்கின்றன கற்பக தருக்கள்
கனத்த மௌனத்தைச் சுமந்து
காற்று விரைகிறது
உள்ளே...
நினைவுகளின் சுழற்சியில்
எதிரொலிக்கிறது என் முகம்





தாவிக் குதிக்கின்ற அலைகளிலே
மூழ்கிப் போகின்ற ஒளிக்கீற்றாய்
கரைந்து போகிறதென் வாழ்வியக்கம்

காலம் என் தலையில் தினமும்
துயரமாய் விடிகிறது
நினைவுகளை எரிக்கமுடியாதபடி
ஏக்கம் நெருங்க
நொருங்கிச் சிதறுகிறது என் மனது
கழற்றி வைத்த மாலையிலிருந்து
கழன்று விழுந்த பூவாக
கால்களிலே நசிகிறது என் உரிமம்

எதிர்காலம் பற்றிய என்
எண்ணங்கள் கருகி உதிர
நிகழ்காலமும் நிதர்சனமற்று கழிகிறது
இழுத்துப் பிடித்திருக்கும் என்
உயிருக்கும் உத்தரவாதமற்று
இருளில் தேய்கிறதென் யுகங்கள்
இது இன்னமும் எத்தனை நாட்களுக்கு?

ஏறிமிதிக்கும் கால்களை உதறி
நான் எழுவேன்
வல்லவன் தான் வாழ்வானெனில்
நானும் வல்லமை பெறுவேன்
என்னவர்களை அடைவேன் - என்
இறைமைகளுக்காய்
ஊழியென எழுவேன்!

ஆதிலட்சுமி (~1997)

## மரணங்களையும் வெல்வோம்

நேற்றைய தினம்
சிதைக்கப்பட்ட எம் உணர்வுகளைச்
சீர்படுத்திக் கொள்வதற்காய்
நிஷ்டூரம் மிக்க அந்த முகங்களை
நினைவிலிருந்து அகற்றிக் கொள்வோம்





எமது காயங்களிலிருந்து
வடிகின்ற குருதித்துளிகள்
உலர்ந்து போகட்டும்
தேசமே சிதைந்து கொண்டிருக்கையில்
தேவையற்ற திசைகளில் தேடுதலா?
மிதக்கின்ற முகில்களையும்
பறக்கின்ற குருவிகளையும்
தாவிவந்து
மரஞ்செடிகளை தழுவுகின்ற தென்றலையும்
மனங்குளிர நேசிப்போம்
அவைதம் மௌனப் பேச்சுக்களை
மொழிபெயர்த்துக் கொள்வோம்

நாளைய சந்ததிக்கு
நம்பிக்கை உணர்வளித்து
நமக்காய் ஒருலகைச் சிருஷ்டிப்போம்
எங்கள் பஞ்சுப்பாதங்களே
துயரப் பாறைகளை மிதித்து
தகர்க்கட்டும்
எட்டாத மலையின் உச்சியாய்
உரைக்கப்பட்ட சுதந்திரத்தை
நாங்கள் சுவீகரிப்போம்
புதிய தலைமுறை நாம்
புதைந்து போகக்கூடாது
மனித மனங்களுக்குள்
முடங்கிக் கிடக்கின்ற
மானுடத்தை விடுவிப்போம் - அதற்காய்
மரணங்களையும் வெல்வோம்

ஆதிலட்சுமி (~1991)

## சிநேகிதம் முடியும்

முன்னே போனவர் நினைவழுத்த
பரபரக்க, அலைகளின் நடுவே
எதிரியைத் தேடி அவள்.
காற்றும் மழையும்
கொடுகும் குளிரும் உறவாய்த் தொடர
புயலிடை புரண்டும்
புன்னகை பூத்தவள்
எதிரியின் எறிகணை
இடிபோல் விழுந்தும்
மனம் இடியாதிருந்து
இடியனோடுலவி
சீறும் அலைகளின் சிநேகிதியானவள்

தூரத்துப் புள்ளிகள்
பெரிதாகிப் பெரிதாகி
இலக்குகள் தெளிவாகும்
விழிகளில் ஒளியேறும்
கடலடி மாண்ட எம்மவர் நினைவுகள்
இதயத்தில் நடமாட
அவள் திசை அதுவாகும்
இலக்குகள் மீண்டும்
புள்ளியாய் மாறினால்
சீறும் அலைகளின்
சிநேகிதம் தொடரும்
ஆயினும் ஓர் நாள்
அதிர்வொன்றோடு சிநேகிதம் முடியும்.

க. கனிமொழி (~2001)

❍ பெண்போராளிகளின் கவிதைகள்



## சமர்ப்பணம்

ஒரு தேசத்தின் இருளை
விடியலை நோக்கி அசைக்கும்
ஆயிரமாயிரம் பேருடனான
என் பயணமும்
ஒருநாள் இலக்கை அடையும்.
இருள் என்பதே அர்த்தமிழந்து
எங்கும்
ஒளிப்பிரவாகம் நிறையும்.
இருளைச் சுமந்த மக்கள்
ஒளி தெறித்து
எங்கும் உலா வருவர்.
இந்த மண்ணின்
பிறப்பு ஒவ்வொன்றும்
வாழ்வின் அர்த்தத்தைக் காணும்
அப்போது நான்
உயிருடன் இருந்திடக் கூடுமா, இல்லை
அதற்காய் இன்றே
என்னுயிர் அர்ப்பணமாகுமா?

ஞானமதி (~2001)

❍ ஊடறு

## எழுதாத கவிதை

எழுதுங்களேன்!
நான் எழுதாது செல்லும்
என் கவிதையை
எழுதுங்களேன்.

ஏராளம் எண்ணங்களை எழுத
எழுந்து வர முடியவில்லை
எல்லையில் என்
துப்பாக்கி எழுந்து நிற்பதால்
எழுந்துவர என்னால் முடியவில்லை
எனவே
எழுதாத என் கவிதையை
எழுதுங்களேன்.

சீறும் துப்பாக்கியின் பின்னால்
என் உடல்
சின்னாபின்னப்பட்டுப் போகலாம்
ஆனால் என்
உணர்வுகள் சிதையாது
உங்களைச் சிந்திக்க வைக்கும் அது.
அப்போது
எழுதாத என் கவிதையை
எழுதுங்களேன்.

மீட்கப்பட்ட எம் மண்ணில்
எங்கள் கல்லறைகள் கட்டப்பட்டால்
அவை
உங்கள் கண்ணீர் அஞ்சலிக்காகவோ





அன்றேல் மலர்வளைய
மரியாதைக்காகவோ அல்ல.
எம் மண்ணின் மறுவாழ்வுக்கு
உங்கள் மனவுறுதி
மகுடம் சூட்ட வேண்டும்
என்பதற்காகவே.
எனவே
எழுதாத என் கவிதையை
எழுதுங்களேன்.

அர்த்தமுள்ள என் மரணத்தின்பின்
அங்கீகரிக்கப்பட்ட தமிழீழத்தில்
நிச்சயம் நீங்கள்
உலா வருவீர்கள்
அப்போ எழுதாத என் கவிதை
எழுந்து நிற்கும் உங்கள்முன்.
என்னைத் தெரிந்தவர்கள்
புரிந்தவர்கள் அரவணைத்தவர்கள்
அன்புகாட்டியவர்கள் அத்தனைபேரும்
எழுதப்படாமல் எழுந்துநிற்கும்
என் கவிதைக்குள் பாருங்கள்
அங்கே
நான் மட்டுமல்ல, என்னுடன்
அத்தனை மாவீரர்களும்
சந்தோசமாய்
உங்களைப் பார்த்து
புன்னகை பூர்ப்போம்!

வானதி (~1991)

*(இது இவரது இறுதிக் கவிதை)*

## புறப்பட்டு வா

ஆணாதிக்கப் புயலால்
அடுப்படியில் அகதியாகி
தீயோடு
மௌனயுத்தம் நடத்துபவளே
புறப்பட்டு வா.

தன்னம்பிக்கையை மட்டும்
தைரியத்துடன் வளர்த்துக்கொள்
உன் விருப்பங்களை
உன் சிந்தனைகளை
சுயமாகச் செயற்படுத்த
சுதந்திரம் கிடைக்கின்றதா?

இல்வாழ்க்கை இன்று,
இல்லாதவர்களுக்கு இல்லையாம்.
இருபதாம் நூற்றாண்டு
இன்னமும் இதைத்தான்
இயற்றிக் கொண்டிருக்கிறது.

ஊமைகண்ட கனவுபோல உன்
உள்ளத்து உணர்வுகளும்
ஊமையாகும்போது
உன்னைக் குட்டுபவர்கள்
குட்டக் குட்ட





நீயும் குனிந்து குனிந்து
அங்கே குசினிக்குள்ளேயே
குமுறிக்கொண்டிருப்பாய்.
புறப்பட்டுவா
ஒரு புதுயுகம் படைப்போம்,
நாம் தூக்கிய
துப்பாக்கியின் பின்னால்.

எம் இதயம் நேசிக்கும்
தேசத்து விடுதலை
எமக்கு எட்டும்போது - அங்கே
பெண்ணடிமைக்கு
சமாதி கட்டப்படும்
சமுதாயத்தின்
பிற்போக்கு சிந்தனைகளுக்கு
புதைகுழி தோண்டப்படும்.

நாளைய இந்த
எழுச்சிக்காக
இன்று நீ எழுந்து வா
அதோபார்
உன்னை நோக்கி
துப்பாக்கியை நீட்டியபடி
இரத்த வெள்ளத்தில்
உன் உடன்பிறப்பு
பிடித்துக்கொள்
அவள் ஆயுதத்தை.
பின்பற்று அவள் சுவடுகளை.

வானதி (~1989)

## நாளைய சந்ததிக்கு நடந்ததைக் கூறு

எம் பிரிய நண்ப,
இந்த மண்ணைவிட்டு
மக்களை விட்டு
நாம் பிரியலாம்
ஆனால்
நீயோ உன் சந்ததியோ
பிரியமுடியாது பிரியவும் கூடாது
இன்றைய தர்ம யுத்தத்தை
நாளைய சந்ததிக்கு கூறு

உன்னைப் போல் எம்முடன்
உள்ளன்போடு உறவாடியவர்
யாருமே இல்லை
எனவே நடந்தைக் கூறு
உன்னை கற்பகதரு என
போற்றியவர்கள்
நீ எமக்கு 'கவர்' ஆகும்
கருத்தை நிச்சயம்
கற்பனையிற் கூட
சேர்த்திருக்கவே மாட்டார்கள்





உக்கிரமான யுத்தத்தில்
எம்முடன் உறுதியோடு
துணையிருந்தவன்
நீ மட்டுமே என்பதால்
நாளைய சந்ததிக்கு
நடந்ததைக் கூறு.
எம் எல்லைகளெல்லாம்
நீ நெருங்கி நிற்பதனால்
எம் இழப்புகள்
குறைந்து போனதை
எடுத்துச் சொல்.
எம்மை துளைக்க வேண்டிய
எத்தனையோ குண்டுகளை
நீ சுமப்பதை
அத்தனை 'செல்' துண்டுகள் உன்
வைரமேனியை ஊடுருவியதை
கூறுவாயா?

தோழனே!
கூடிநின்று கதைத்தவர்கள்
அடுத்த நிமிடம் மரணமானதை
வேதனைகளை மனதுள்
மறைக்க முடியாமல்
உன்னில் மறைந்து
கண்களை துடைத்துக் கொண்டதை
கூறுவாயா?
எம்மை உளவு பார்க்க
ஆகாயத்தில் திடீர்திடீரென
வட்டமடிக்கும் அந்த
வல்லூறுகளிடமிருந்து தப்பிவிட

உன்னை சுற்றிச்சுற்றி நாம்
மறைந்ததை, அதற்காய்
அவன் தீர்க்கும் வேட்டுக்களை
நீ வேண்டிக் கொண்டதை
கூறுவாயா?

மாளிகையில் வாழ்வதை விடவும்
உன் ஒற்றை நிழலில்
காவல் இருந்ததை
சந்தோசமாய் அதை நினைத்ததை
பஞ்சணையில் படுத்ததை விட
பசும் புல்லில்
சுகமாய்த் தூங்கியதை
மழையில் நனைந்து
அடுத்த ஆடை மாற்றாது
'பொஸிசனில்' நின்றதை
பசி மறந்து
தூக்கம் மறந்து
எதிரி எல்லையை மீறுவதெனில்
எம் உடல்களின் மேலாகத்தான் என
உறுதியோடு காவலிருந்ததை
கூறுவாயா?

இந்த புனித பூமி மீண்டும்
களங்கப்படக் கூடாது
எனவே
அடுத்த சந்ததிக்கு
வரலாறு தெரிய வேண்டும்
தோழனே!
உண்மையைக் கூறு





எல்லை காக்கப்பட வேண்டும் என்ற
உண்மையைக் கூறு.
எந்த நிமிடத்திலும்
மரணத்தை
சந்திக்கத் தயாராயிருந்ததால்
ஒற்றைக் காலை
உன்னில் ஊன்றி
மனதை தொட்ட
மகத்தான உண்மைகளை
நினைத்து சந்தோசப்பட்டதை
கூறுவாயா?

பிரிய நண்ப,
எம் இரத்தத்தைக் கூட
உன் வேர்கள் உறிஞ்சியுள்ளதால்
உன்னிடமும் எம் இலட்சியம்
உயிர் பெற்று விட்டதால்
கடமை உனக்கும் கட்டளையிடுவதால்
அடுத்த சந்ததிக்கு
கட்டாயமாகக் கூறு.

உன்னை விட
உணர்வுபூர்வமாய்
சொல்லக் கூடியவர்கள்
யாருமே இல்லை
எனவே
மண்ணின் மகத்துவத்தை
வருங்கால மைந்தர்களிடம்
கட்டாயமாகக் கூறு.
உனக்குத் தெரியும்

எம் தலைவனை நாம்
எப்படி நேசித்தோம்
எப்படி மதித்தோம்
எப்படி வாழ்ந்தோம் என்பதெல்லாம்.

அவன் சுட்டுவிரல் அசைப்பில்
எத்தனை சக்தி
என்பதை நீ அறிவாய்
எத்தனை அழுத்தங்களின்
பின்னாலும்
எழுந்து நிற்கிறோம் என்றால்
அது அவன்
கட்டளையின் சிறப்பு
பிறக்கப்போகும் தமிழீழத்தை
நிச்சயம் நீ காண்பாய் - எனவே
அடுத்த சந்ததிக்கு கூறு
தமிழீழத்தில்
தன்மானம் விலைபோகக் கூடாதென
அடித்துக் கூறு.

நாளை உன் நிழலில்
நான் மடியலாம்
என் குருதியையும்
உன் வேர்கள் உறிஞ்சலாம்
என் நினைவுகளும்
உன்னுள் காவலிருக்கலாம்
தமிழீழத் தாயகத்தை
பார்த்து மகிழலாம்.

வானதி (~1991)





## ஓயாத அலை மூன்றில்

மாவீரர் வழித்தடங்கள்
கடந்தோம்
அந்த மறவீரர் நினைவுடனே
நடந்தோம்
நீளலைகள் தாண்டி எங்கள்
நிலம் மிதிக்க துடித்திங்கே
வீரவழிப் பயணத்தை
தொடர்ந்தோம்
கூவி வந்த எறிகணைக்காய்
குனிந்தோம்
அடுத்த செல் வந்து
அதிருமுன்னே விரைந்தோம்
மீண்டும் கையில்
எடுத்த ஆயுதத்துடன்
நடந்தோம்.
பகைக் காவலரண் எம்
கையில் வரும்வரை
பயணம் தொடர்ந்தோம்.

செ.புரட்சிகா (~2001)

## காலம் அவளது கைபிடித்து நகர்கிறது

உறுதிப்படுத்தப்படாத உலக அழிவு
ஒருநாள்
உண்மையாகிப் போயிடினும்
அதன்பின் வரும்
யாருமேயறியாத ஆரம்பம் ஒன்றில்
பூபதியின் பெயர்
பொறிக்கப்பட்டிருக்கும்

பிறிதொரு முறை
பிறந்து வரமாட்டாள் என்பது
பிழையறப் புரிகிறது
இறந்து போனவர்களுக்குத் தானே
இன்னோர் பிறப்பு.
ஆனாலும்
உள்ளம் அவளை அழைக்கிறது

நேற்று வரை
நிலவையும் நட்சத்திரங்களையும்
நிமிர்ந்து பார்த்து
நெடுமூச்செறிந்தவள் - இன்று
அண்டங்களே அதிசயித்து
அண்ணார்ந்து பார்த்து நிற்க
புவியீர்ப்புக்கப்பால்
புரையோடி நிற்கிறாள்
அன்று
உரிமைப் பசிக்கு





உதவி கோரி நின்றோம்
உலகநாடுகள் முன்.
தமிழன் வயிற்றுப் பசியை
வாதாட்டத்திற்கு வைத்தது
வல்லரசு.

அனைத்து நாடுகளும்
அண்ணார்ந்து பார்த்து நிற்க
உயரத்திலிருந்து விழுந்தன
உணவுப் பொட்டலங்கள்.
ஒருதலைப்பட்சமாய்
உள்ளே வந்த வல்லரசால்
அரிசிப் பொதிகள் விழுந்த
அதே குச்சொழுங்கைகளில்
குப்பெனப் பீறிட்டது குருதியாறு.

குச்சொழுங்கைகளில் பரவிய
குருதியாற்றுக்குக் குறுக்கே
நேரு தேசத்துப் படையிடம்
நீதி கேட்டு
பூகோளம் அதிர
பூபதி நடந்தாள்.
அரிசி மூடைகள்
அருகில் இருக்கையில்
சோறின்றி மடிந்த
சோகம் நடந்தது

முற்றுகைக்குள் சிக்கி
மூச்சுத் திணறிய தமிழுக்கு
காற்றுக் கொடுத்தாள்

புனிதமான பூமிக்குள் ஒரு
பூகம்பத்தின் புகழுடம்பு
பூபதி
தமிழ்ப்புலர்வின் குடியிருப்பு.

வலம் வந்து வணங்கி
வரலாறு
வாழ்த்துப் பா இசைக்க
பதிவு செய்வதற்குப்
பக்கங்கள் போதாதென்று
சரித்திரம்
அவள் சாவில்
விக்கித்து நிற்கின்றது.

கணமும் நகராமல்
காற்று அவள்
கல்லறையில் சுழன்று வர
வரலாற்றுப் போக்கில் தாமும்
வற்றாமல் வாழ்வதற்கு
அழியா வரம் பெற்றவளின்
அஸ்தி கேட்டு
காற்றிடம் சமுத்திரங்கள்
கையேந்தி நிற்கின்றன.

காலையில் வந்த கதிரவன்
கல்லறை வெளிச்சத்தில்
கண்கூசி கைகூப்ப,
மாலையில் வந்த
மஞ்சள் நிலவு அவள்
கல்லறையின் ஒளியை





கடன் கேட்டு நிற்கின்றது
அந்தோ
இலட்சியவாதியின் சமாதியில்
இயற்கை
இரண்டறக் கலக்கிறது.

தாயே!
பிரபஞ்ச வரலாற்றின்
பிரமாண்டமான உச்சியில்
உயிரோட்டத்தோடு
உன்னை நீ
செத்துச் செத்துச்
செதுக்கிக் கொண்டாய்

உசத்தியாகப் பேசப்பட்ட
உலக அதிசயங்கள்
ஒதுங்கி நின்று பார்த்து நிற்க
பிறக்கும் யுகங்களும்
பிரமிப்பில் ஆழ்ந்து நிற்க
காலம் உந்தன்
கை பிடித்து நகர்கிறது.

அதனால் சொல்லுகின்றோம்
உறுதிப்படுத்தப்படாத உலக அழிவு
ஒருநாள் உண்மையாகிப்போயிடினும்
அதற்குப்பின் வரும்
யாருமேயறியாத ஆரம்பமொன்றிலும்
உந்தன் பெயர் உயிர்த்திருக்கும்.

கஸ்தூரி (~1991)

## கொழுந்துக் கூடைகள்

சுரண்டல் தராசுகளில்
கொழுந்துக் கூடைகளை
கொழுவி விட்டு
தேனீருக்காக ஏங்கும் இத்
தேயிலைச் செடிகள்
அக்கினியாய் அணிவகுத்து
அவலங்களை எரிப்பதெந்நாள்?

கஸ்தூரி (~1989)





## அவை வெற்றுடல்கள் அல்ல வெடிமருந்துப் பொதிகள்

தேசமோ தென்றலுக்காய்
தவம் கிடந்தது
புரட்சிப்பூ
புஷ்பித்துக் கொண்டதால்
சுற்றிச் சுற்றி அங்கே
சூறாவளி அடிக்கிறது.

எண்பத்தேழு வைகாசியில்
இலங்கையரசு
படையெடுத்து வந்து
படுகொலை புரிந்தது.
அன்று அழுது புலம்பியவர்க்கு
ஆறுதல் அளிப்பது போல்
அமைதியாய் ஆக்கிரமித்தது
அயல் நாட்டுப் படை.

உணவும் மருந்தும் கொண்டு
உள்ளே வந்தார்கள்
சிரித்து மழுப்பி
சென்று வாருங்கள் என்றோம்.
தோள் கொடுப்பதாகக் கூறி
தோளிலேயே குந்திவிட்டார்கள்

காக்க வந்தவர்க்கே
கண்ணிவெடி வைத்து விட்டோமாம்
கோபம் வந்ததால்

கொன்று விட்டார்களாம்
கொளுத்தி விட்டார்களாம்

நீங்கள் காப்பாற்ற வந்த
காரணம் தெரிந்ததால்தான்
அன்றே உங்களை
வேண்டாம் வேண்டாம் என
வீதிகளில் வெகுண்டெழுந்தோம்.
அப்போதே நீங்கள்
அனுமானித்திருக்க வேண்டும்
மீறி வந்தால்
மிதிவெடி வைப்போம் என.

அயல்நாடுகள் எல்லாம்
அதட்டிக் கேட்கின்றன
உள்ளூர்ச் சண்டையில்
உனக்கென்ன வேலை என்று.

காற்றில் கலந்தவர்களே!
வீதியில் கேட்ட
வேட்டுச் சத்தத்தால்
திடுக்குற்ற நீங்கள்
திறந்த வாய் மூடுமுன்பே
அடுத்து வந்த குண்டுக்கு
ஆளாகியிருப்பீர்கள்

ஆமாம்
கண்ணிமைக்கும் பொழுதில்
காரியங்கள் முடிந்துவிட்டன
அழுவதற்கு கூட





அவர்களுக்கு
அவகாசம் இருக்கவில்லை
சுண்ணமிடிக்கவோ
சுடலைக்குச் சென்று
அஸ்தி அள்ளிப்போய்
ஆழ்கடலில் கரைக்கவோ
வீட்டுக் கொருவரைக்கூட
இவர்கள் விட்டுவைக்கவில்லை.

ஆனாலும் வல்வை மணலில்
வதைப்பட்டு
புதையுண்டோர் இதயத் துடிப்புக்கள்
இன்னமும் அடங்கவில்லை
சுதந்திரம் சுதந்திரம் என
சொல்லியபடியே
அவர்கள் சுவாசங்கள் ஒவ்வொன்றும்
சுடுகாடு சென்றன.

தமிழீழம் தமிழீழம் என
தழதழத்தபடி தானே
இவர்கள் விருப்பங்களெல்லாம்
விடைபெற்றுச் சென்றன.

வீழ்ந்தவர்களே வேதனைப்படாதீர்கள்
மணற்குவியல்களுள்
மறைந்து கிடந்தாலும் உங்கள்
உடல்கள் வெற்றுடல்கள் அல்ல,
வெடிமருந்துப் பொதிகள்!

கஸ்தூரி (~1989)

## சுதந்திரமே

சுதந்திரமே!
உன்னோடு
சொந்தம் கொண்டாடப் புறப்பட்டதால்
சாவு இங்கே
சாதாரண விலைக்கு வந்துவிட்டது
உன் விலையோ இன்னும்
உயர்ந்து கொண்டே செல்கிறது

சில நாடுகளில் சில்லறைக்கே
அங்கீகரிக்கப்படும் உனக்கு
நாம் நோட்டு நோட்டாய்க்
கொடுத்த பின்பும்
வேட்டுக்கள்தானே கேட்கின்றன.

ஆனாலும்
வேட்டுக்களுக்கோர் விண்ணப்பம்!
விடுதலையை உங்களால்
விழுங்கிவிட முடியாது
சுதந்திரத்தை உங்களால்
சுட்டுப் பொசுக்க முடியாது
ஆகவே
தியாகிகளிடமிருந்து திரும்பிச்சென்று
சமூக விரோதிகளின் உடலில்
சரணடைந்து கொள்ளுங்கள்!

கஸ்தூரி (~1989)





## வல்லரசுகள்

வல்லரசுகளே
நீங்கள் வாழ்வதற்காக
வாழ்பவர்களை வதைப்பவர்கள்
உங்கள் வல்லமை
ஆய்வு செய்யப்படுகையில்
வளர்முக நாடுகளே
வாழா வெட்டியாகின்றன
நீங்கள்
நிலவில் வரலாறு படைக்க
மண்ணை மானபங்கம் செய்பவர்கள்

வறுமையும் பிணியும்
உங்கள் வருகையால்
வளர்க்கப்படுபவை

உங்கள் தேசத்து
செஞ்சிலுவைச் சங்கங்களும்
சேதங்களைச் சேகரிப்பதில்லை,
இருப்புகளையே எண்ணிப் பார்க்கின்றன.
உங்கள் நாட்டுக் கணக்காய்வாளர்கள்
இறப்புக் கணக்குளை

இருப்புக் பக்கத்தில்
பதிந்து காட்டும் பட்டதாரிகள்
உங்களோடு
சம்பந்தம் செய்து கொண்ட
சமாதான நாடுகள்
இங்கு பிரசவித்துக் கொண்டது
பிரச்சினைகளைத்தான்
உங்கள் விமான நிலையங்கள்
விஸ்தரிக்கப்படுகையில்
எங்கள் குடிசைகள் அல்லவா
கொளுத்தப்படுகின்றன.

சமாதான நாடுகளில்
சாமர்த்தியமாய் நுழைந்து
ஆணிவேரை அறுத்துவிட்டு
வாடாது நிற்க
நீர் ஊற்றுபவர்கள் நீங்கள்.
உங்கள் தலையீடுகளால்
தரைமட்டமாகிப் போன தேசங்களே
அதிகம்.
நீங்கள் பரவிய எயிட்ஸ் இங்கே
இயற்கையானதல்ல என்றபின்
காற்றும் மழையும் கூட
சந்தேகப்படுகின்றன.

நாளைய செயற்கைப் புயலுக்கு
சொந்தம் கொண்டாடப் போகும்
சர்வதேசப் பயங்கரவாதிகள் நீங்கள்!

கஸ்தூரி (~1992)





## இறப்பற்றோர்

வெட்டப்பட்ட கரங்கள்
வேகமுடன் வளர்கின்றன
முறிக்க முறிக்க முளைவிடும்
மூர்க்கமான செடியைப் போல்,
கத்தரிக்கப்பட்ட கரங்கள்
கணுக்களைப் பிரசவிக்கின்றன
சிதைக்கப்பட்டவைகள்
சிவப்பாக வெடிக்கின்றன.

நெரிக்கப்பட்ட குரல்வளைகள்
நெருப்பு வரிகளில்

முற்றுகையை எதிர்த்து
முழக்கமிடுகின்றன.

சூடுபட்ட சுவாசப் பைகள்
ஆக்கிரமிப்பாளனை அவிப்பதற்கு
விடுதலை மூச்சை
வெம்மையாய் வெளியேற்றுகின்றன.
இறந்து போனான் என
எதிரியவன் எக்காளமிடுகையில்
உடல்கள் இங்கே
பிறவி எடுக்கின்றன.

எதிரிகளே
துடிக்கப் பதைக்க
வதைத்துக் கொல்லுங்கள்
துண்டிக்கத் துண்டிக்க
துளிர்ப்பர் வீரர் அவர்.

எங்கள் எல்லை நீங்கி
உங்கள் படைகள் ஓடும்வரை
எங்கள் வீரர்க்கு
இறப்பேயில்லை.

உரிமை வேண்டி
உயர்ந்த கரங்கள்
ஆக்கிரமிப்புக்கு
அடிபணிந்து போகாது.

கஸ்தூரி (~1991)
*(இறுதியாக எழுதப்பட்ட கவிதை இது)*





## உயிர்ப்பு

காலத்தின் சுமைகள் என்
இதயத்தை அழுத்துகின்றன - நான்
விடுகின்ற மூச்சுக் கூட
முனகியபடியேதான்.
இருப்பினும்
ஊன்றிச் சுவாசிக்கின்றேன்
அது செல்லட்டும்
தூரச் செல்லட்டும்
மிகத் தூரச் செல்லட்டும்
ஒரு சிறிய மூலைக்குள்ளும்
பொந்துக்குள்ளும் கூட
செல்லட்டும் - அங்கே
என்னைப் போன்ற
இன்னொருவருக்கு அது
உயிர்ப்பளிக்கலாம்.

கி.கிருபா (~2001)

## அம்மா

நான் எரிமலையிலிருந்துதான்
தோன்றியிருக்க வேண்டும்
ஆம் அப்படித்தான் இருக்கும்
இல்லையேல்
எனக்குள்ளிருக்கும் நெருப்பு
எங்கிருந்து வந்தது?





அம்மாவிடமிருந்தா?
இருக்காது.
அவள் ஊருக்கெல்லாம் சோறு போட்டு
தன் பசியாறுபவள்
என் சிரிப்புக்காகவே உயிர்வாழ்பவள்
அவளிடம் நான் எரிநெருப்பை
ஒருபோதும் கண்டதில்லை.

ஓ! ஒருவேளை அவள்
ஒடுக்கப்பட்ட ஒவ்வொரு முறையும்
அடக்கி வைத்த ஆத்திரம்தான்
என்னிலிருந்து
பெரும் பொறியாய் எழுகிறதோ
அவளது உரிமைகள்
மறுக்கப்பட்டதால்தான் என்
குரல் ஓங்கி ஒலிக்கின்றதோ.

யார் காலில் மிதிபடவும்
தயாரில்லாமல், எனை
எவரும் வேரோடு பிடுங்கியெறிய
அனுமதியாமலும்
நான் செய்யும் போரின் வேர்
உன்னுடையது தானேயம்மா
உரிமைப் போரில்
உன் குஞ்சு தோற்றுப்போகாதிருக்க
எந்த வேளையிலும் எனை
இழக்காதிருக்க
ஆசீர்வதி அம்மா!

மலைமகள் (~2001)

## அவள் ஒன்றுக்கும் அசையாள்

வானமே கிழிந்தது போல்
வாரிவாரி மழை பெய்தது
காவலரணையும் மேவி
வெள்ளம்
கால் பரப்பி நடந்தது
கடும் பயிற்சி எடுப்பதால்
தேய்ந்து நைந்து
கிழிந்த காற்சட்டை ஒன்றை
தைத்தவாறிருந்தாள் ஒருத்தி.





ஊசியில் நூல் கோர்த்தவாறு
அவள் மெல்லச் சொன்னாள்
"வானமும் பீத்தலாய்ப் போய்ச்சுது
இது முடிய அதையும் நான்
பொத்தித் தைக்கப் போறன்"

நிலமெல்லாம் ஊறி
தடியெல்லாம் பாறி
பொறிந்து
விழப்போன கொட்டிலுக்கு
முட்டுக் கொடுத்த
அடுத்தவள் முணுமுணுத்தாள்
"சனமெல்லாம் பாவம்
நனையப்போகுதுகள்"

சாக்குத் தொப்பியில்
மழைநீர் ஊறி
தலையெல்லாம் கனக்க
கருவியோடு தானும்
நனைந்தே
குளிரில் பல் கிடுக்க
மரத்தின் மறைவிலிருந்து
பகைத்தளம் நோக்கி தன்
விழி விரித்த வீரி ஒருத்தி
சற்றும் அசைந்தாளில்லை
மழை வெள்ளமென்ன
பகைவெள்ளம் வந்தாலும்
அவள் அசையாள், வெல்வாள்!

மலைமகள் (~2001)

## உயரும் என் குரல்

ஏன் இது இப்படி?
எவருக்கென்ன துரோகம் செய்தேன்,
எனக்கிந்தத் துன்பம் நேர.
என் மனதறிந்து, கனவில் கூட
எவரையும் புண்படுத்தியதாயில்லை
ஏனிந்த அவலம் எனைச் சூழ்ந்தது?

உயிர் வாழ்வதன்றி வேறொன்றறியா
எம் உறவுகள்
மண்ணோடு போக
உளம் புண்ணாகி உடல் சோர்ந்து
வீதியிறங்கி
வியர்வைத் துவாரங்களால்
இரத்தம் கசிய
கதறியழுது அலையும் வாழ்வு
ஏன் எனக்கு வந்தது?

என்னைப் போலவே
இன்னும் சிலரின் ஆன்மாவும்
இப்படிக் கதறக் கூடும்





மனதை மிதிக்கும் அரக்கச் சூழலில்
நசியுண்டிருக்கக் கூடும்
என்னைப் போலவே
அவர் விம்மலும்
தொண்டைக்குழியில் சிக்கி
நெருக்குண்டு புதையுண்டு
கிடக்கக் கூடும்.

உள்ளக் கொதிப்பால் சூடேறி
வெந்நீராய் வழியும் என் கண்ணீரை
புதையுண்டுபோன மனிதரும்
புதைக்கச் சொன்னவரும்
அறியாமல் போகலாம்
போகட்டும் பரவாயில்லை.

நான் உரத்துக் கத்துவேன்
புதைக்கச் சொன்னவர் எவரோ
அவரின் நிம்மதியழியும் வரைக்கும்
நான் கத்துவேன்
இனியும் எவரையும் எதையும்
புதைக்க நினைக்கவும் முடியாமல்
அவர் அமைதி குலைந்து
ஆன்மா அலைந்து
உடல் நடுங்கி இதயம் சிதைந்து
வாய் பிதற்றும் வரையில்
நான் கத்துவேன்.

ஒரு சொல்
ஒரேயொரு சொல்
கதைப்பதற்கும் வழியின்றி

புதைக்கப்பட்ட
அத்தனை மனிதருக்குமாய்
அடிவயிற்றிலிருந்து எழும்
என் கதறல்
செம்மணி வெளி கடந்து
பிரபஞ்சமெங்கும் பரவும்
நட்சத்திரங்களை உலுக்கும்
புயலின் திசையை மாற்றும்.
எரிமலையின் குமுறலையும்
பூகம்ப அதிர்வையும்
புதைக்கச் சொன்னவர் வீட்டு
முற்றத்துக்கு வரவழைக்கும்
கடைசிமூச்சை அவர்
விடும் கணத்திலும்
காதுக்குள் இரையும்.

மண்ணுக்குள் புதைக்கப்பட்ட
மனிதரை
எழுப்பும் வல்லமை எனக்கில்லை
ஆனால் கொல்லச் சொன்னவரை
உயிருடன் உலவும் பிணங்களாக்க
என் குரலுக்கு இயலும்
வாய் கிழிந்து நரம்பு பிளந்து
குருதி வழிகையிலும்
என் குரல் அதிரும்
ஆதிக்கக் கோட்டைகள்
உதிரும் வரையில்
எனது குரல் உயரும்.

மலைமகள் (~1998)





## எதைத்தான் பாடுவது?

நேற்றுவரை கருமேகம் சூழ்ந்து
கவிந்து கிடந்த நுழைவாயிலில்
இரும்புத்திரை
தொங்கிக் கிடந்த எம் வாயிலில்
குந்தியிருந்த பேய்களை
ஒரு பொழுதுக்குள் துடைத்தழிக்க
ஓராயிரம் எத்தனிப்புகள் செய்து - பின்
ஓய்ந்த நேரங்களில்
கவிதை வந்தது.

ஊர்ந்து போன கதை
ஊர் கலைத்த எதிரிகளை
உளவறிந்த கதை
கொல்லவந்த பகைவருக்கு
குண்டெறிந்த கதை
அலையலையாய் நாம் புகுந்து
'ஆட்டி' அடித்த கதை என
ஆயிரம் கரு எமக்கு
கவிதை எழுத.

இன்று
கவிதை வருகுதில்லை
போகும் வழியிலே
பெருந்தடையாய்க் கிடந்த
கல்லை உடைத்தபின் - அதை
கவிதையாய் எழுத
கற்பனையில் முழுக

மீட்டதை ஒருமுறை கண்டுவர
கால்வீசி நடைபோட
எமக்கேது நேரம்?
என்றாலும்
கிடைத்த ஒரு பொழுதில்
ஆனையிறவு விழுந்திட்டுது
ஆகா ஓகோவென விழுந்தடித்து ஓடி
வெற்றி வரவைத் தேட,
அவர் பளையையும் பிடித்து
பாத யாத்திரை போயினர்.

பளை போவதற்காய்
இயக்கச்சி கடக்கையிலே
அரியாலையில் அடிவைத்தார்
கைதடியில் கால் பதித்தார்
நாவற்குழியை
நாலு எட்டில் கடந்தார்
நானெதை எழுத?
இந்த அவசரத்தில் எதை
என்னவென்று எழுத?

ஆயிரமாய் வீரர்கள்
உயிர் கொடுத்துப் பகையழிக்க
ஆனையிறவு வீழ்ந்தது.
இந்துமா சமுத்திரத்தில்
இன்னொரு நாடு
உருவாக
அத்திவாரம் அமைந்தது, அவ்வளவே!

மலைமகள் (~1998)





## பெயரிடாத நட்சத்திரங்கள்

அன்பான தோழி
நீயும் இல்லை
உனக்குக் கல்லறையும் இல்லை
கண்ணீர் விட்டு அழமுடிந்தும்
பெயர் சொல்லியழ முடியவில்லை தோழி.

உன் சாதனை உன்னதம்
உயிரிலும் மேலான உன் தோழிக்கும்
தெரியாமல் நீ சென்றாய்
உயிரைத் துறந்த அக்கணம்
உடல் சிதறிய அந்நேரம்
அறியேன் தோழி.
கல்லறையில்லாத காவியமே உன்
தணியாத காதலை நான் அறிவேன்
உன்னை ஓவியமாய்
கண்ணெதிரே வரையாவிட்டாலும்
கற்பனைச் சித்திரமாய்
இதயத்தில் வரைந்துவிட்டேன்

காவியத்தின் சிகரமே
பெயரிடாத நட்சத்திரமே!
பல்லாயிரம் நட்சத்திரங்களில் உன்
பிரகாசம் மட்டும் என் கண்ணைப் பறித்துக்
கதை சொல்கிறது, தோழீ!
கவலை இனி உனக்கெதற்கு
கடமை சரிவர நடக்கும்
கடந்த உன் தடத்தில்
என் பாதம் பதியும்.

நகுலா (~2001)

## காதலின் புதிய பரிமாணம்

இப்பொதெல்லாம் அவனை
அடிக்கடி காண முடிவதில்லை
சற்றுத் தொலைவில் வேறொரு
முகாமிற்கு மாற்றப்பட்டிருந்தான்.
என் பாதைகளை
மாற்றியும் கூட அவனை
அடிக்கடி காண முடிவதில்லை.
முகாமின் வாசலில்
அவனது வாகனமோ
தோழர்களோ நிற்கக் கூடும்
எல்லாவற்றையும் தாண்டிய
தேடலாய் என் பார்வை விரியும்.

அவனது ஒவ்வொரு அசைவும்
என்னுள்ளே மனப்பாடமாகியிருக்கிறது
கடிதங்களோ அவனருகிலாய் உணர்த்தும்.
கடிதங்களை மீட்டலில்
பதிவுகளை வெளிக்கொணர்தலில்
கால நகர்த்தலாய் கழிவுறும் நாட்கள்.

எப்போதாவது தெருவில்
அவசர இயக்கத்தில்
கண்டுவிட நேர்கையில்
சந்திப்பை வரவேற்பதாய் அவன்
கண்கள் ஒருமுறை விரியும்
மறுகணம் ஆழ்ந்து மூடிக்கொள்ளும்.
அவனுக்குத் தெரியும்
எனக்கு அது போதுமென்று.

நாமகள் (~1995)





## யதார்த்தம்

ஒரு கணம் தான்
அதிலும் குறைவாகக்கூட இருக்கலாம்
யாருமே எதிர்பாராமல்
அது நிகழ்ந்தது.
அந்தச் சந்தியை
கடந்து கொண்டிருந்தவர்கள்
தேநீர்க் கடையினுள்ளே
அமர்ந்திருந்தவர்கள்
மண்ணெண்ணெய்க்காய்
வரிசையில் நின்றவர்கள்
எல்லோரையும் தாண்டி
அவன் முன்பாய் நிகழ்ந்தது
அந்த வெடிப்பு.

மேலே விமானங்கள் இல்லை
ஷெல்தான்.
அவன் மேலெழும்பி
கீழே விழுந்தான்
எந்தச் சத்தமுமில்லை
கத்த நினைப்பதற்குள் அவன்
இறந்திருக்க வேண்டும்
வெடிப்பின் அதிர்வில், கத்தல்
கேட்காமலும் போயிருக்கலாம்
எதுவும் சொல்தற்கில்லை
சனங்கள்
திடீரென ஒதுங்கிப் போனார்கள்

தேநீர்க் கடையின் பாட்டுக்கூட
நின்றுபோயிருந்தது
வெறிச்சோடிய வீதியில்
அவன் மட்டும்
தனியாகக் கிடந்தான்.
கையொன்று வீதியின் மறுகரையில்
விரல்களை நீட்டியபடி
யாரையோ குற்றஞ்சாட்டுவதாய்.

சில நிமிடங்கள்தான்
அம்புலன்ஸ் எல்லாவற்றையும்
அள்ளிக்கொண்டு போனது
எஞ்சியதாய்
அவனது இரத்தம் கொஞ்சம்
ஒன்றிரண்டு சைக்கிள் கம்பிகள்
ஷெல் துண்டுகள்
அவ்வளவுதான்.

வாகனங்கள் அவற்றையும்
துடைத்துக்கொண்டே கடந்தன.
வீதியில் இப்போ எதுவுமேயில்லை
எல்லாமே பழையபடி.
மண்ணெண்ணெய் வரிசை
முன்பைவிட நீண்டிருக்கிறது
தேநீர்க் கடையிலும்
புதிதாய் ஒரு பாட்டு ஆரம்பமாகிறது
சனங்கள் விரைந்து கொண்டிருக்கிறார்கள்,
எதுவுமே நிகழாத மாதிரி.

நாமகள் (~1994)





## எனது நெருப்பு மேலெழுகிறது

என் குரல் வளையில்
உனது பிடி இன்னமும் இறுகியேயுள்ளது
நான் அறிவேன்,
தளர்த்துதல் பற்றிய
உனது வாக்குறுதிகள்
வெறும் நாடகமே என.
வேதனை மிகுந்த எனது குரலொலி
தேய்ந்து மறைந்துள்ளது
விழிகள் பிதுங்கி
முகம் வெளிறிப்போன போதிலும்
என் சுவாசத்தை நிறுத்தி விட
உன்னால் முடிந்ததில்லை
உன் பிடியின் இறுக்கத்தில்
என்னுள்ளே
அழுத்தம் அதிகரித்து
வெடிப்பு நிகழும்
உன் கால்களின் அருகாக
நான் மூட்டிய நெருப்பு உனை
நெருங்கிக் கொண்டிருப்பதை
நீ அறியாய்
'எச்.எஸ்.748'
ஒரு புதிய ஆரம்பமே
நீ பார்த்துக் கொண்டிருக்கையிலேயே
குரல் வளையை இறுக்கியுள்ள
உனது கைகளிலும்
விரைவாய்த் தீப்பற்றும்.

நாமகள் (~1995)

# எழுதாத உன் கவிதை

''எழுதாத என் கவிதையை
எழுதுங்களேன்'' எனும்
உன் கவிதை
எழுதப்பட்டுவிட்டது.
உப்பு வெளியில்
உருகிய உங்கள்
உடல்கள் மீது
எமது வீரர்கள்
எழுதாத உன் கவிதையை
எழுதி முடித்தனர்.

தூரிகையால் வரையப்பட்ட
ஓவியங்களாய் நாம்
உங்களைப் பார்க்கவில்லை
காவலரண்களின் முன்னே
வித்துடல்களாய் நீங்கள்.
எம்மை ஏறி மிதித்து அவர்
ஏளனம் செய்த மண்ணில்
இப்போ எம்
தேசியக்கொடி பறந்து
எழுதாத உன் கவிதை
எழுதப்பட்டு விட்டது.
அன்று அவர்
விதையான வீரர்மேல்
ஷெல் மழை பொழிந்த போதும்
உறுதியை நாம் இழக்கவில்லை
உரமேற்றிக் கொண்டோம்





எழுதாத உன் கவிதையை
எழுதுவதற்காகவே.
நீல வரிப்புலிகள் தரையிறங்க
கறுப்பு வரிப்புலிகள் 'ஆட்டி' தகர்க்க
பச்சை வரிப்புலிகள் இடம் பிடிக்க
புலிக்கொடி ஏற்றப்பட்ட ஆனையிறவு
இன்று சிங்காரமாய்ச் சிரிக்கிறது

உன் துப்பாக்கி முனையை விட
உனது பேனா கூர்மையானதால்,
எழுதாது போன உன் கவியை
எழுதுவதற்காக இவர்
உயிரைக் கோலாக்கி
உதிரத்தை மையாக்கினார்.
எழுதாத உன் கவிதையை எழுதிவிட்டு
எம் செல்வக் குழந்தைகள்
உன்னிடமே வந்து விட்டனர்.
அவர் எழுதிய கவிதையைப் பார்.
ஏராளம் ஏராளமாய் உனது எண்ணங்கள்
எழுதப்படப்போகும் உன்
கவிதைத் தொடர்ச்சி
இனி இடைவிடாது எழுதப்படும்.
எங்கள் கைக்கு வந்த உந்தன்
பேனாவுக்கு இனி ஓய்வே இல்லை.

நாதினி (~2000)

*1991இல் ஆனையிறவு சமரின்போது 'எழுதாத என் கவிதை' என்ற தன் இறுதிக் கவிதையை கப்டன் வானதி எழுதிக் கொண்டிருந்தபோது அவர் அருகில் இருந்த போராளி நாதினி. 2000 இல் ஆனையிறவுத் தளம் மீட்கப்பட்டபின் எழுதிய கவிதை இது. இதுவே இவரின் முதல் கவிதை.*

## மீண்டும் ஒரு காலை

கொடிய வாகனங்களின்
கோரப் பற்கள்
கறுப்பு நிலத்தில்
சல்லடை போட்டன

குவலயத்தின் சரிவில்
மீண்டும் ஓர்
குருதியின் கொப்பளிப்பு





சின்னப்புக் கிழவனின்
பெட்டிக் கடை மட்டும்
தனித்து அங்கு
சரிந்து கிடந்தது

கிணற்று வெடிப்பில்
விளைந்த ஆலும்
இலையை உதிர்த்து
மடிந்து செத்தது

தரிசில் கிடந்த
கோரையின் முதுகிலும்
கோரப் பதிவின்
நினைவுத் தடங்கள்

குலை வாழைகள்
குப்புறக் கிடந்தன
முளைவிட்ட குட்டிகள்
முனைப்போடு நின்றன.

சிதைந்த மதிலில்
சிறுதுண்டு கல்லில்
சின்னப் போராளியின்
சிரித்த முகம் தெரிந்தது

சப்தங்கள் அடங்கிய
ஒரு காலை மீண்டும்
மெல்லப் புலர்ந்தது.

பிறேமினி (~1993)

## உண்மைகளைத் தேடி

ஊருக்கு ஒதுக்குப்புறம்
கத்திக் குளறிக்
குரல் எழுப்பினாலும்
எட்டி உதவிக்கு வரவும் ஆளில்லை
தட்டிக் கேட்கவும் யாருமில்லை என
நரபலி எடுக்கும் உன்
நயவஞ்சகச் செயலுக்கு
ஏற்ற இடமென்றா
செம்மணியைத் தோந்தெடுத்தாய்?





பகையே! ஒன்றைப் புரிந்துகொள்
உண்மைகள் உறங்கியதாய்
யார் சொன்னார்?
நீதியும் தர்மமும் அழிந்ததாய்
எவர் உரைத்தார்?

ஊமையாய் எங்கள் உறவுகளை
உக்கித்துப் போகச் செய்த
கொடியவரே
உலகைமூடியொரு திரையை
நீர் விரிக்கலாம்
ஆழகிய வர்ணங்களால்
சித்திரங்கள் வரையலாம்
ஆனால்
'சமானத்திற்கான யுத்தத்தின்' முடிவுகள்
அநாமதேயப் புதைகுழிகள் தானென்றால்
அதை
அனுமதிக்க முடியாது

பொய்த்திரையைக் கிழித்து
புதைகுழியைத் தோண்டுவோம்
எம் தேசத்தை மீட்க
நாம் எடுக்கும் முடிவின்
நேரம் இது
இதோ வருகிறோம்
தோண்டிய புதைகுழிகளில்
உன்னைப் புதைத்திட
இதோ வருகிறோம்.

பிரமிளா (~1998)

## அப்புறமாய் வருகிறேன்

அம்மா
இன்று நான் உன்னிடம் வந்தபோது
வீட்டு முற்றத்தில் பதிந்த என்
பாதச் சுவடுகளை
பாதுகாத்து வை
நாளை நான் வருவேன் என்பது
என்ன நிச்சயம்
அப்படியிருக்க
அப்பாவிற்கும் வயதாகிவிட்டதென
திக்கித் திணறி சொல்கிறாய்

கன்றுக்கு புல் சேர்த்து வைத்து
பசுவொன்று இறந்ததாய்
வரலாறு கிடையாது - அதனால்
கவலையை விடு
விழி நீர் வழிந்துவிடும் என்றுதானே
நீர் கோர்த்த கண்களுடன் எனை
நிமிர்ந்து பார்க்காமல்
குமுறுகிறாய்.

'சான்றோன் எனக் கேட்ட தாய்'
அப்போது அது பழமொழி.
உனக்குத் தெரியுமா,





'மாவீரர் எனக் கேட்டதாய்' - இது
இப்போ நான் விரும்பும் புதுமொழி
அம்மா
வேதனையை குத்தகை எடுத்து
குனிந்திருந்த உன் தலை
அப்போ ஆனந்தக் கண்ணீரோடு
நிமிர்ந்து நிற்கும்.

கொள்ளி வைக்க
பிள்ளை இல்லை என
அப்பா புலம்புவதாய் - நீயும்
சேர்ந்து புலம்புகிறாய்.
அவரிடம் கூறு,
சந்தனக்கட்டையில் வேக
நாம் ஒன்றும்
நேரு பரம்பரை அல்ல.
சுதந்திரமாய் எரியக்கூட நமக்கு
உரிமை இல்லை.

அம்மா புரிந்து கொள்
அந்நியன் மறுத்துள்ள சுதந்திரம் - நம்
சுடலைக்கும் சேர்த்துத்தான்
எம் மண்ணின் கடற்கரைகளில்
பதிந்துள்ள அந்நியத் தடயங்களை
அழித்துவிட்டு
அப்புறமாய் வருகிறேன்
அப்பாவின் ஆஸ்தியை அள்ளிப் போய்
கடலில் கரைப்பதற்கு!

ரூபி மார்க்கிரட் (~1992)

## எப்போ விடியும் என் இரவு

வெளியே
பனித்துளிகள் இலைத் துளிர்களில்
பட்டுத் தெறிக்கின்றன.
என் உள்ளேயோ
ஆறாத பெருந் தணலின் வெப்பம்
அணுவணுவாய் எனைத் தீய்க்க
வெந்து உருகுகிறேன் நித்தமும்.
எப்போ விடியும் என் இரவு?





இந்த நான்கு சுவர்களுக்குள்
சிலுவை சுமப்பது நான் மட்டுமல்ல
ஆணியில் அறையப்பட்ட என்
உணர்வுகளும் தான்.
எப்போ விடியும் என் இரவு?

மாற்றமெதுவுமின்றி புலரும் காலைகளும்
தோலைத் துளைத்து
உயிரைச் சில்லிட வைக்கும்
கொடும் பனியினூடு நகரும்
எனது இரைதேடும் பயணமும்...
எப்போ விடியம் என் இரவு?

நினைவில் வந்து
நிழலாடும் என்
வயோதிப அன்னையும்
மணமாலைக்காய் காத்திருக்கும்
முதிர்கன்னிய சகோதரியரும்,
நட்சத்திரங்களை
வீட்டினுள் இருந்தவாறே
எண்ணவல்ல எம்
மாற்றமுடியா வறுமையும்...

நித்தமும் வேகுகிறேன்
வெந்துடல் நோகின்றேன்
எப்போ விடியும் என் இரவு?

பாரதி (~2001)

*இவர் செந்தணல் என்ற பெயரிலும் எழுதியுள்ளார்*

## நம்பிக்கை ஒளி

நான் பறக்கத் துடிக்கிறேன்
என்னால் முடியவில்லை

என் கைகளும், கால்களும்
பிணைக்கப்பட்டு
சிரசிலே முள்முடி தரிக்க
நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளேன்.
என் முழுச் சக்தியையும் திரட்டி
நான் பறக்கத் துடிக்கின்றேன்
என்னால் முடியவில்லை.

ஒடுக்குமுறைகள் என்
குரல்வளையை நெரிக்கின்றன
மூடநம்பிக்கைகளோ என் மேனிமீது
பாம்புகளாய் நெளிகின்றன
சாக்கடை நாற்றத்தை விஞ்சிய
துர்வாடை என் நாசிகளை
மூச்சுமுட்ட முனைகிறது

ஆனாலும்
என்னுள் முகை கொண்டுள்ள
அசைக்கவியலா ஒளிபொருந்திய
நம்பிக்கைமீது மட்டும்
ஆணி அறைந்திட
எவற்றாலும் முடியவில்லை.

பாரதி (~2001)





## கல்லறைக்குள் ஒரு கருவறை

கவிதைகளைச் சுமந்த
கருவறையை இன்று
கல்லறை ஒன்று சுமக்கிறது.

ஆம்! கஸ்தூரி
கவிதைகளின் நாயகியே
இதோ உன்
கல்லறையைச் சுற்றி
ஒரு கவிமாலை.

விறைத்துவிட்ட உன் உடல்
வீரமரணத்தை
உறுதிப்படுத்தினாலும்
உண்மை என்று ஏற்றுக்கொள்ள
உள்ளம் மறுக்கிறது.
ஆயிரத்தில் ஒருவராக
அஞ்சலிக்காய்
அத்தனை வீரர்களுள் நீயும்
மலர்ப்படுக்கையில் மௌனமாக.

ஆனால் உன் காலடியிலோ
கவிதைகள் எல்லாம்
கரைந்து போயின.
சிறுகதைகள் எல்லாம் உனை
சிரிக்க வைக்கும் முயற்சியில்.
நாடகங்கள் எல்லாம்
உன் மரணமும்
நாடகமாகாதா என்ற நப்பாசையில்.

நீ ஆசைவைத்துப் பார்க்கின்ற
இந்த அழகான தேசத்திற்கு
உன்னால் தேடப்பட்ட
சொத்துக்கள் இவைதான்.

உனை இனங்காணத் தவறிய
இலக்கிய உலகின்
இதயத்திற்கு
இப்போதாவது தெரிந்திருக்கும்
நீ இமயமென்று.
துப்பாக்கி மட்டுமே
தூக்கத் தெரிந்தவர்கள் என்ற
தப்பான வெற்றுக் கோள்களுக்கு
நீ வெடிகுண்டு.

தமிழீழத்தில் நீ
தடுத்து வைக்கப்பட வேண்டியவள்
ஆனால்
விடுதலையின் வீச்சு உன்னையும்
விலையாக்கிக் கொண்டது.

கணப்பொழுதொன்று
காலமெலாம்
கவலைப்படப் போகின்றது - தான்
காவல் செய்தபோது
கண்ணயர்ந்ததுதான்
நீ காணாமல் போனதற்கு
காரணம் என!

பாரதி (~1993)





## அன்பான அம்மா

அன்பான அம்மா!
என் தேசத்தில்
ஒரு வைகைறையை
வரவேற்பதற்காய்
வரலாற்றுக் கடமை
அழைப்பு விடுத்தது - அதில்
காணாமல் போன உன்
அன்பு மகளின்
உள்ளத்து உணர்வுகள்
இங்கே...

((:))

சின்ன வயதில்
அயல்வீட்டுச் சிறுமியுடன் விளையாட
உன் அனுமதியை
பெற்றுச் சென்றதும்
நீண்ட தெருக்களில்
தென்னைமர நிழல்களில்
முட்கிளுவை வேலிகளுக்கு
இடையில் நின்று
இ.போ.ச. பஸ்ஸை மறித்ததும்,
சூரியன் மறைவதை
சற்றேனும் சிந்திக்காது
அந்தக் கருக்கலிலும்
வீடு வரா எனைத் தேடி
அப்பாவுக்குத் தெரியாது
அழைத்துச் சென்றதையும்
இன்னமும் நான் மறக்கவில்லை.

அம்மா!
இன்னும்...
அதிகாலைப் பொழுதில்
உண்ணவும் நேரமில்லாத
என் இயந்திர வாழ்வில்
நீ உணவு தீத்தியதையும்
சுடுகாட்டின் அருகாமைப் பாதையை
நினைத்து
பயப்படும் உன்
இயல்பான சுபாவத்திலும்
படிக்க வைக்க வேண்டும்
என்பதற்காய்
மண்ணெண்ணெய் விளக்கின் ஒளியை
காற்று மறைக்கவும்
எத்தனை இரவுகள்
மழையில் நனைந்தும்
இரவில் என்னை
கூட்டி வந்த
உன் மெலிந்த உருவத்தை
எப்படி நான் மறக்க?

இன்று
நான் வரவில்லையென நீ
அழுது கொள்வதாக
நான் கேள்விப்படுகிறேன்.

அன்பான அம்மாவே!
நான் உன்னை
அளவு கடந்து நேசிக்கிறேன்.
அதனிலும் பார்க்க





நான் ஓடி விளையாடிய
என் வீட்டு முற்றத்தை
நான் கால் பதித்த
ஒற்றையடிப் பாதைகளை
செம்பாட்டு மண்படிந்த என்
தெருக்களை
சணல் பூத்துக் குலுங்கும்
என் தேசத்தை
தோட்ட வெளிகளை
இப்படி இப்படியாய்
எத்தனையோ...

மொத்தத்தில்
என் தேசத்தை
எனதருமை மக்களை நான்
மானசீகமாக நேசிக்கிறேன்
இதனால்
அடிமை இருளால் மூடப்பட்ட
என் தேசத்தில்
வைகறையை வரவேற்க
தம்பி தங்கைகளுடன்
நான் செல்கிறேன்

நாளை
திரும்பி வரா உன்
மகளை எண்ணி
நீ கவலைப்படாதே
என் மறைவின் பின்னர்
புதிய தோழர்கள்
அந்த வைகறைக்காய்

புறப்படுவார்கள்.
அதற்கு முன்னால்
அவர்கள் உன்னிடம் வரலாம்
அப்போது அவர்களின்
புதிய சீருடையில்
புதிய துப்பாக்கியில்
இனிய முகங்களில்
என்னைப் பார்.

அடுத்து வரும் நாட்களில்
அவர்களும்
இல்லாமல் போகலாம்
ஆனால்
என்றோ ஒரு நாள்
எம் மக்கள் புறப்படுவார்கள்
அப்போது அந்த
புதிய விடியலை வரவேற்கும்
அதிகாலைப் புஸ்பங்களாய்
மெல்லிய பனித்துளியின்
முகத்தின் பின்னால்
நாம் முகையவிழ்ந்து
தென்றலின் தடவலில்
முகமலர்ந்தாடுவோம்.

அப்போது நீ இருந்தால்
உற்றுப் பார்
உன் செல்ல மகளின் முகம்
சிரித்தபடியே தெரியும்.

பாரதி (~1993)





## உயிர்க்கூடொன்றில் உறுதியாய் ஒரு வீடு

அவளுக்குள் இருக்கும்
அந்த வீடு
அப்பனின் முதுசொமோ
ஆத்தாளின் சீதனமோ அன்று - அது
அவளே அவளுக்காய்க் கட்டியது
அழகு நிறைந்தது
அளவில் பெரியது
எனினும் எளிமையானது
எவரையும் ஈர்ப்பது

((:))

மெத்தப் படித்தவர்,
மேதினிக் காகாதவர்
செப்படி வித்தையில்
தேர்ந்த விற்பன்னர்
திரிசங்கு சொர்க்கமாய்
தினமும் வாழ்பவர்

எட்டுப் படிப்பதில்
கோட்டை விட்டவர்
ஏனென்று கேட்வும்
நாதியற்றவர்
அத்தனை பேரும்
எத்தனமின்றி
எப்போதும் நுழைய
ஏற்றத் தாழ்வின்றி
எவருடனும் அமர
அன்பெனும் தேநீர்
அளவின்றி அருந்த
அறிவெனும் அமுதை
தெளிவுடன் புசிக்க
அளவறிந்து பழக
ஆறுதலாய் உரையாட
அளவில் பெரியதாய்
வரவேற்கும் அறையொன்று

சம்பாவுனைச் சந்தையில்
சகஜமாய்க் கிடைக்கும்
சங்கதி அனைத்தையும்
தனியாய் தரம் பிரித்து
வேண்டியது எடுத்து
வேண்டாதது தவிர்த்து
அழுகல் நீக்கி
அழுக்கைத் துடைத்து
அறுசுவை உணவாக்கி
அடுத்தவருக்குக் கொடுக்க
அழகாய் அடக்கமாய்
அடுக்களையும் அதற்குண்டு





அவனும் அவளும்
அவர்களின் வாரிசும்
அடுத்தவர் இடைஞ்சலின்றி
அமைதியாய் பள்ளிகொள்ள
குடும்ப உலகமதில்
குதூகலமாய் விளையாட
நாலுபேர் அறியாமல்
நாலும் கதைக்க
தொந்தரவின்றி அந்தரங்கம் பேச
பள்ளியறை ஒன்றும்
பாங்காய் அதற்குண்டு

அடுத்தவர் அறியாமல்
அடிக்கடி வந்து போக
தனிமையில் தன்னை
கூறுபோட்டு ஆராய
அறிந்தவர் கருத்தனைத்தும்
ஆழமுடன் பகுத்துணர
கற்பனை வானில்
களிப்புடன் சிறகசைக்க
அவளுக்கே அவளுக்கென
அந்தரங்க அறையொன்றும்
அடக்கமாய் அதற்குண்டு.

((:))

அப்பனின் ஆக்கிரமிப்பில்
ஆத்தாளின் அறிவீனத்தில்
அடுத்துப் பிறந்தவனின்
அசண்டையீனத்தில்
தேடுவார் இன்றி

தினம் தினம் வரண்டு
காரைக்கும் நெருஞ்சிக்கும்
தொட்டவுடன் முகஞ்சுருக்கும்
தொட்டாற்சுருங்கிக்கும்
கட்டின்றி உள்நுழையும்
கட்டாக்காலிகளுக்கும்
களமாய் இருந்த
அவளது நிலத்தில்
இப்படி வீடெழுப்ப
எப்படி முடிந்ததோ?

((:))

கட்டற்ற காணிக்கும்
பட்டறிவால் வேலியிட்டு
கண்டவரும் நுழையாமல்
கண்ணியத்தால் கதவு செய்து
முற்போக்குத் தனத்தால்
முட்கள் அகற்றி
தன்மான உணர்வே
நல் உரமாக

கண்ணுங் கருத்துமாய்
மண்ணைப் பண்படுத்தி
பக்குவமாய் அதை
பசுந்தோட்டமாக்கி
அறிவு வேட்டையில்
அங்கங்கே கிடைத்ததெல்லாம்
அடித்தளமாய் அமைய
வாழ்க்கைப் பாதையில்
விழுத்திய கற்களெல்லாம்





கற்சுவராய் எழுப்ப
தன்னம்பிக்கையால் ஒரு
வன் கூரையிட்டு
இத்தனை உறுதியாய்
இல்லம் எழுப்பிவிட்டாள்

((:))

தன்னினியதாய் மண்ணை
அந்நியனின் கணைகள்
சன்னமாய் துளைத்தபோதும்
அர்த்த ராத்திரியில்
அங்கத்தை இழந்துவிட்டு
தளராது நின்று
தன் வீட்டைக் காத்த அவள்
இப்போது மட்டும்..?
சக்கு பிடித்துவரும்
சமுதாயச் சகதிதனில்
சரிந்து விடுமோ
வக்கிர மனங்களின்
துக்கிரிப் போக்கினால்
ஆட்டங் காணுமோ
என நித்தம் கலங்கி
கண்ணும் கருத்துமாய் அதை
காக்கும் பணிதனில்
நாளும் பொழுதும்
வாழ்வே அதுவாக..!

சிரஞ்சீவி (~2001)

*அர்த்தநாரீ என்ற பெயரிலும் எழுதியிருக்கிறார்.*

## மாற்றம்

போர்க்களந் தன்னில்
பேராற்றல் காட்டி
வரலாறு படைத்திட்ட
வீர மகளிரின்
வித்துடல் சுமந்த
ஊர்திகள் தம்மை
கடந்து சென்றபோதெல்லாம்
தலை வணங்கி நின்றிருக்கின்றது
அந்த வேலி

ஆறடி நிலத்திற்குள்
அடங்கும் விருப்பமின்றி
அன்னை மண் முழுவதும்
உலா வருவோமென்று
வெடித்துச் சிதறி
காற்றுடன் கலந்து நிற்பவர்கள்
உருவப் படங்களுக்கு





மலர் தூவும் பேறிற்காய்
மகிழ்வடைந்திருக்கிறது
அந்த முகப்பு வாயில்

தாய் நிலம் மீட்க
தோள் கொடுத்து விட்டு
குதூகலம் மாறாமல்
குறுஞ்சிரிப்பும் போகாமல்
பொய்க்கால்களும்
போய்விட்ட விழிகளுமாய்
உலா வருகின்ற
எண்ணற்ற காலடிகளை
தரிசித்து வியந்திருக்கிறது
அந்த வாசற்படி.

இத்தனைக்குப் பின்னும்
விழிதிறக்க விருப்பமின்றி
மனம் மாறும் போக்கின்றி
பேதையர் என்றும்
பூவையர் என்றும்
சுருதி பிசகாமல்
ஒரே தாளகதியில்
மீண்டும் மீண்டும்
உதடுகள் இசைக்கும்
வெற்றுக் கோசங்களை
சுமப்பதற்காய்
வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறது
அந்த வீடு.

சீரஞ்சீவி (~2001)

## காலங்களற்ற கடல்

இரவு அமைதியானது
என்றுதான் எல்லோரும் சொல்கிறார்கள்
நானும் அதனை ஏற்றுக் கொள்கின்றேன்
ஏனெனில்,
எல்லோரும் சொல்கிறார்கள் என்பதனால்.

அந்தக் கடலிற்கு மட்டுமே தெரியும்
இரவே இல்லாதவர்களைப் பற்றி.
மாலைகளில் அவர்கள் கரை வருவார்கள்
நேற்றுப் பயணித்த தங்கள் கலங்களின்





ஆயுதங்களுக்கு எண்ணெயிட்டவாறு
இயந்திரங்களைப் பழுது பார்த்துக் கொண்டு
உடைவுகளைத் திருத்தியபடி.
நேற்றைகளின் தூக்கமின்மை
கண்களில் மின்ன
அவர்கள் கரங்களால் படகுகள் இறங்கும்
மடக்குத் தாண்டிக் கலங்கள் கையசைக்கும்
சலனமின்றிக் கரைகள் கண் பனிக்கும்
தங்களுக்காக வலைவிரித்துக் காத்திருக்கும்
புதிய நவீன கடற்கலங்கள் பற்றிய
கவலைகள் அற்றவர் காற்றில் விரைவார்
கடமை முடிப்பதில் கண்ணாய் இருப்பார்
கையசைத்துப் போனவர்கள் வரும்வரைக்கும்
கண்ணிமைக்காமல் கரைகள் காத்திருக்கும்

பழுதின்றிப் பணி முடியும் வேளைகள் தினம்
எதிர்பாராத சில வேளைகளில் மட்டுமே
ஒளிரும் திசைகளில் புள்ளிகள் தெரியும்
ஒன்றாகி இரண்டாகிப் புள்ளிகள் குவியும்
சிங்கங்களுக்கு
தனியாக வேட்டையாடும் துணிவில்லை
கூட்டமாகப் பாய்கின்ற வேளைகளிலும்
அவை பின்வாங்க நேரிடுவது அதிகம்
இரவுகளை விடுவிக்கின்ற சூரியனுக்கே
நம்பிக்கை அளிக்கும்
வல்லமையின் குழந்தைகள்
கூட்டங்களுக்கு அஞ்சாமல் போரிடுவர்
வேட்டையாடப்படும் சிங்கங்கள்
மூச்சிழக்கும் அல்லது
தமது தளம் நோக்கி அவை முன்னேறும்

விடிவினை முன்னறிவித்துக்
கலங்கள் கரையேறும்
கடந்த இரவில்
கையசைத்த கரங்கள் சில
செயலிழந்திருப்பதை அலைகள் அறிவிக்கும்
மீண்டும் கலங்கள் பழுது பார்க்கப்படும்
ஆயுதங்கள் மறுபடியும் மெருகு பெறும்
இயந்திரங்களின் உடைவுகளும் சீராகும்
கடந்த இரவில் இழக்கப்பட்ட கரங்களுக்காய்
ஏனைய கரங்கள் மடக்குகளில் செயற்படும்
மீண்டும் கலங்கள் கடலிறங்கி கையசைக்கும்

ஒளிரும் திரைகளில் புள்ளிகள் தெரியும்
கடலின் நடுவில் செந்தணல் கனலும்
ஒவ்வொரு நாளும் வரலாறு விரியும்
உணர்வுகளை தனது
சுரப்புகளால் கடத்துகையிலும்
கரையின் கண்கள் இமைக்க மறுக்கும்
பயணங்கள் ஒருபோதும் முடிவுறாது
என்பதனால்
அவை விழித்திருக்கவே விரும்பும்

இப்பொழுதும் இரவு அமைதியானது
என்றுதான் எல்லோரும் சொல்கிறார்கள்
கடல் அடிக்கும் ஓசை
காதுகளுக்கு எட்டாத தூரம் இருக்கலாம்
ஆயினும் பூமிப்பந்தின் பெரும் பகுதி
நீரால் நிறைந்திருக்கின்றது என்பது உண்மை.

சூரியநிலா (~2001)

*சோழநிலா என்ற பெயரிலும் இவர் எழுதியுள்ளார்*





## தீயினால் தீயை

இரும்புக் குழல்களின்
இலக்குகளாக்கப்பட்டு
இரத்தம் சிந்துகிறது
எம் வாழ்வு - அது
கக்கும் அனலில் கருகி
செயலிழக்கிறது,
கந்தகம் கலந்த காற்றுப் பட்டு
கசங்கலாகிப் போகிறது.

இனவாதத் தீ
எம் வாழ்வை
சுட்டுப் பொசுக்குகின்றது
நான்கு புறமும்
தீயின் நாக்குகள் எமை
விழுங்க வருகிறபோது
கண்முன்னே தெரியும்
சுவாலைக்கு விலகி
பின்னோக்கி நகர்ந்தாலும்
பொசுக்கப்படுவது நிச்சயம்
எனவே
நாங்களும் தீ வளர்ப்போம்,
கண்ணிலும் நெஞ்சிலும்!

சூரியநிலா (~2001)

## மழைக் காலங்கள்

மழை ரசிக்கத் தக்கது
காற்று கட்டுப்படுத்தப்பட்ட அறையின்
கண்ணாடி சாளரங்களினூடே
பூமரங்களைத் தழுவி வழிவதை
சூடான தேநீரை அருந்தியபடி
பார்க்கும்போது
மழை மிகவும் ரசிக்கத்தக்கது.

மழை வெறுக்கவும் தக்கது
வேயாத கூரைகளினூடே விழுந்து
போர்வையற்ற மனிதர்களைத் தழுவி





மருந்துகளற்ற மருத்துவமனைகளில்
அவர்களை
படுக்கவைக்கும் பொழுதும்
உரமற்று விளையும் பயிர்களை
வரம்பின்றிப் பெருகி
அழிக்கும் பொழுதும்
பதுங்கு குழிக்குள் நிறைந்து
நகர்வுகளை தடுக்கும் பொழுதும்
எங்கள் சுவாசமாய் இயங்கும்
ஆயுதங்களில்
இயங்குநிலைத் தடைகளை
ஏற்படுத்தும் பொழுதும், மழை
வெறுக்கத்தக்கதாகவே இருக்கின்றது
எனினும்
மழையை எவரும் வெறுப்பதில்லை

சில வேளைகளில் நாங்களும்
மழையை ரசிக்கக் கூடும்
காற்றுக் கட்டுப்படுத்தப்பட்ட அறைகளும்
கண்ணாடிச் சாளரங்களும்
பூமரங்களை மழை தழுவும் காட்சியும்
அனைவருக்கும் கிடைக்கும் பொழுது
நாங்களும்
மழையை ரசிக்கக் கூடும்,
உதடுகளில் பொருத்தப்பட்ட
தேநீர் கோப்பையை மறந்து
மழைத்துளிகளில் ஒளிரும்
தோழர்களின் நினைவில் தோய்ந்தபடி!

சூரியநிலா (~2001)

## எரித்த நிலத்தில் படரும் என் வேர்

எனக்கு நினைவிருக்கிறது
அநாதையாய்
இந்த மரநிழலில் உறங்கிக்கொண்டிருக்கும்
இவர்களுக்கு ஒரு
அழகான வீடிருந்தது என்பது.
அழகிய நிலா முற்றத்தில்
உறவுகள் யாவும் கதைபேசி
களித்திருந்த அந்த
பௌணர்மி நாட்களை
இன்னும் நினைவிருக்கிறது.

செம்பருத்திப் பூக்கள்
கண்மலர்த்தி நின்ற ஒரு காலையில்
எங்கள் ஊரில்
கூவித் திரிந்த குயில்களோடும்
பச்சைவயல் வெளியெங்கும் சிறகடித்த
வண்ணத்துப் பூச்சிகளோடும்
எங்களுக்கு உறவிருந்தது.
களங்கப்படாத காற்றுக்குள்
கனவு வளர்த்த பூமிக்குள்
எங்கள் வேர்கள் விரிந்தபடியிருந்தன.
நாங்கள் நேசமாயிருந்தோம்

எமைவிட்டு துார விலகிய வசந்தமே
வார்த்தைகளால்
வடிவம் கொடுக்க முடியாத வாழ்வே
மயானமாக்கப்பட்டதோர் அமைதியின் பின்னே





எனது குரல்
ஒற்றையாய் ஓங்கி ஒலிக்கிறது
நிம்மதி தந்த நிழல்களும்
எனது புகலிடங்களும்
தீ நாக்குகளுக்கு இரையாயின.
எமது பாலிய காலத்து
ஞாபகங்களுக்கடியில்
வாழ்ந்து கொண்டிருந்த இந்தத்
தேசத்தின் வனப்பு எவ்வாறு
உருக்குலைந்து போனது என்பது
இன்னும் இன்னும்
நினைவுகளில் ஆறாத ரணங்களாய்!

எமது குரல்வளையிலிருந்து
வெளிப்படும் துயரப் பாடல்
இடிந்துபோன நகரத்தின் சுவர்களில்
எதிரொலிக்கிறது
கதிர்கள் முற்றி
எரிக்கப்பட்ட வயல்களில்
தவழ்ந்து செல்கிறது
எமது காற்றடங்கள் பற்றிய
செம்மண் தெருக்களிலும்
நிழல்படர்ந்த குச்சொழுங்கைக்குள்ளும்
ஊடறுத்துச் செல்கிறது.

நான் பாடுவேன் உரத்தபடி
எனது துப்பாக்கியை உயர்த்தியபடி
எனது உதிரத்துடிப்பு இருக்கும்வரை!

சுதாமதி (~1996)

## புதைத்தவரின் புதைகுழி

அலைந்து வருகின்ற
மனித ஓலங்கள்
இன்னும் முடிவுறாத பயணங்களில்
துயரம் சூழ
வாசல்கள் இருண்டன.
நிலவு படர்கின்ற வெளியெங்கும்
நிணங்களாய்,
இறுதி மூச்சடங்கியோரின்
இடுகாடான செம்மணி, ஏன்
உயிரோடிருந்தவரின் புதைகுழியானது.





மூச்சடங்கு முன்னே மூடப்பட்ட
மண்மேடுகளில்
யார் யார் குழந்தைகள்,
எவரின் உறவுகள்.
முகவரி இழந்துபோன தமிழனின்
பொதுக் குழியா செம்மணி.

இருள்பிரியா காலையின்
இறுதிப் பிரிவாய்
கைகளிற் பூட்டப்பட்ட விலங்குடன்
கொண்டு செல்லப்பட்டனர் அவர்கள்.
அம்மாவின் குழந்தையும்
அக்காவின் கணவனும்
'காணாமற் போனவர்கள்' ஆயினர்.
இனிய கிராமத்துப் பறவைகளே
குரலெடுத்துக் கூவ முடியாதவர்களின்
இறுதிக் குரலைக் கேட்டாயா?

'தாய்மை' பேசிய பெண்ணரசியின்
கொலைக்கரங்கள் மூடிய
புதைகுழிகள் எத்தனையோ?
உறவுகளின்
நெடிய மூச்சுக்கள் சுட்டெரிக்க
விழிவழிகின்ற
கண்ணீர்த் துளிகள்
பெரும் ஊழித்தீயாய் மாற
மீண்டும் எழும்
புதைத்தவரின் புதைகுழி!

சுதாமதி (~1998)

## ஒரு போர்ப் பாடல்

துயில் இழந்த இரவுகளில்
மனதின் மெல்லிய சுவர்களில்
அறைகின்றன அந்த ஞாபகங்கள்
புற்கள் கருகி
கந்தக நெடி சுமந்த
காற்றின் வெம்மையில்
நினவுருகி எரிகின்றன

தீ நாக்குகள் மெலெழ
புகையடர்ந்து கிடக்கிறது
எதிரியின் குகை
ஒரு வசந்தத்தின் வருகைக்காய்
ஆனையிறவின் வாசலில்
வீழ்ந்த புயல்களே
நேற்று இந் நீண்டதூரம்
விழி சுமந்த கனவுடனும்
காற்றின் பாடலுடனும்
கையசைத்து வந்தீர்
வெற்றி எமக்கேயென
உரத்துக் கூவினீர்

இன்றும் உம்
போர்ப்பாடல் கேட்கிறது
தரையதிர வந்தவர்கள்
வதைபடும் காலம் வந்ததென
காதில் அது சொல்கிறது.

சுதாமதி (~2000)





## புரிந்துணர்வே அடித்தளமாய்

பூவோடு பிஞ்சும் போர்க்களம் காணும்
தேசத்தின் புத்திரியே!
உன்னோடு சில நிமிடம்...
எங்கள் தாயும், தாயவள் தாயும்
அல்லல்கள் சுமந்ததுவும்
அடிமையாய் வாழ்ந்ததுவும்
அடங்கி ஒதுங்கி நொந்துபோனதுவும்
நீ அறிவாய்.

இருபதாம் நூற்றாண்டின்
இளைய மகள் நீ
கூட்டுப் பறவையாய் நீயும் மடிவதா?
வேண்டாம்.
வான் முகட்டினை தொட நிமிர்ந்திடும்
வலிமை உன்னிடம்.
உலகின் உச்சியில் நின்று பாடிடும்
திடம் உன் வசம்

அடிமைப்படுத்துகிறார்களே என்ற
ஆதங்கம் இனி வேண்டாம்
அடிமையாய் ஏனுளோம் என்பதை யோசி
அடங்கியிரோம் என்ற கோசங்கள் வேண்டாம்,
ஆர்த்தெழுந்து செயலில் காட்டு
புதிய தேசம் உருவாகக் கைகொடு.
பெண்மையே பேதமை என
வரன்முறை வகுத்தவர்
வாழ்ந்திட வழி தரார்
வழியை நீ செய்.
மீட்பர் வருவரென காத்திருத்தல் வீண்
விடுதலைக்கான பயணத்தைத் தொடங்கு
பாதை கடினம் தான்,
தளராதே, முன்னே செல்!
நிச்சயம் இலக்கில் பாதம் பதிப்பாய்.

தோழீ!
இன்னும் சில வார்த்தைகள்...
சிந்தனையை விரிவாக்கு,
சிறகுகளை அகல விரி.
விழிப்புணர்வே விவேகம்
விரைந்து செயற்படு
ஆணும் பெண்ணும் உலகின் இயக்கம்
புரிந்து கொள்.
புரிந்துணர்வே அடித்தளமாய்
புதிய சமுதாயம் விரைவாய் மலரட்டும்
இவ்வளவே, இனி
வருங்காலம் உன்னிடம்!

தமிழவள் (~1993)





## போராடும் எதுவும் நின்று நிலைக்கும்

செம்மணி.
'ரிவரெச'ப் பேயின் ஊழிக் கூத்தில்
உயிர் காக்க எங்கள் இனிய உறவுகள்
இடம்பெயர்ந்து நகர்கையிலே
இதயம் கசிந்துருக வழியனுப்பி
'காத்தேன் என்
மக்களைக் காத்தேன்' என
சிலிர்த்த நீள் வெளி
பத்திரமாய்
தான் வழியனுப்பி வைத்தவர்கள்
தன் மடிக்கே
பிணங்களாய் வந்தபோது
என்ன நினைத்திருக்கும்?

கோபத்தில் குமுறி
ஆற்றாமையில் வெந்து
துயரத்தில் அழுதிருக்குமோ
பெற்றவர்களைப் போலவே!

பயிர் விதைத்த நிலமெங்கும்
உடல் புதைத்த சிங்களமே
உப்புவெளிக் காற்றின்
‘ஊ’வென்ற பேரொலியில்
நானூறு உயிரொலிகள் கலந்து
தாம் பட்டவதை சொல்லி
காவிநிறப் பூச்சின் சாயம் அழித்து
கோரச் சிவப்பை உலகுக்குணர்த்தும்.

புதைகுழிகளே ஆட்சியைத் தெரிகின்ற
புனித தேசமிது.
நரபலியும் இனவெறியும்
பௌத்தத்தின் போதனைகள்
என்றான தீவு இது.
நீதிக்கும் பேச்சுக்கும்
சமாதானக் காற்றுக்கும்
இடமில்லை என்றான பின்னாலும்
உயிரிழக்கக் காத்திருக்கும் உறவுகளே
போராடும் எதுவும் நின்று நிலைக்கும்
மற்றவை எல்லாம் அழிந்தே போகும்
நினைவில் கொள்க.

தமிழவள் (~1998)

*‘ரிவரெச’ - யாழ்ப்பாணத்தை கைப்பற்ற 1995 இல் இராணுவம் மேற்கொண்ட படை நடவடிக்கை*





## கரிப்புமணி நிலம் கைவந்து சேர்ந்தது

நிலவெறித்த பொழுதிலும்
நிலவொழித்த இருளிலும்
வெண்துகள் குவியல்கள்
சிரித்திருந்த தாய்நிலம்,
கரிப்பு மணிகளின்
தூய விளைநிலம்
பகைவன் குகையாய்
பரந்து கொண்டது

வாசலில் விரிந்திருந்தது
நிலம் விழுங்கி - எம்
உயிர்பூக்கள் பல விழுங்கி
பசித்திருந்தது.

கவிதைகளாய் வானதி, கஸ்தூரியும்
கனவுகளாய் தமயந்தி, திலகாவும்
நூற்றுக் கணக்கில்
நெருப்பணிந்த நிலவுகளும்
உயிர்களைந்து போனபின்னும்
எமது நிலம் எமக்கில்லை.

ஆனையிறவு அசையாத இறவாம்
சொல்லியது சிங்களம்.
இந்த விசப்பற்களின் துணிவில்
'சூரியக்கதிர்' நாகம்
சுழன்றாடியது.
விசமூட்டி விசமூட்டி
உறவுகளைப் புதைத்தது.
ஓயாத அலை மூன்றாய்
ஊழி எழுந்தது
தலைவன் அசைவில்
விசப்பல் எகிறி
வீழ்ந்து குலைந்தது
எம் வாசலும் திறந்தது
ஆயிரமாயிரம் வீரரின் மூச்சுக்
காற்றினில் அசையுது அழகாய்
எம் கொடி!

தமிழவள் (~2000)





## செம்மணி சிவப்பானது

என் வீட்டில் இருக்கும்
ஆசைக் கிளியே
உன்னை நான் கூண்டில்
சிறை வைக்கவில்லை

கூண்டின் கதவுகள் எப்போதுமே
திறந்துதான் இருந்தது
உன் தேவைகளை தீர்த்திட
எம் வான் பரப்பெங்கும்
நீ பறப்பாய்

அந்தி வேளையில்
உன் இருப்பிடம் வந்தடைந்து
என்னோடு கொஞ்சு மொழிபேசி
களித்திருப்பாய்

உன்னினப் பறவைகளோடு
உல்லாசமாய்த் திரிவதற்கு
தடையேதும் நான் போட்டதில்லை
கூண்டின் கதவுகளைப் பூட்டவில்லை

இனவழிப்பு வேடர்களின்
அம்பு பட்டுப்
பாய்ந்த செங்குருதி
செம்மணித் தரையைச் சிவப்பாக்க
உன்னினப் பறவைகள்
துடிதுடித்து மாண்டதை
தப்பியோடிவந்த நீ சொன்னாய்
நேற்று உன்னோடு பறந்த
உன்னினப் பறவைகள்
இன்னும் கூடு வரவில்லை.

உன்னினத்தை அழிக்கவே
அவர்கள்
அம்புகளுடன் காத்திருக்கிறார்கள்
என் ஆசைக்கிளியே நீ
நீண்டகாலம் என்னோடு இருக்கவேண்டும்
உனக்கான சுதந்திரக் காலம் வரும்வரை
செம்மணியின் ஓலத்தை
உலகெலாம் எடுத்துச் சொல்ல
என்னோடிரு கிளியே
இந்தக் கூண்டின் மடியில்
விடுதலைப் பாடல் ஒலிக்கும்வரை
நீ என்னோடு இரு!

தயாமதி (~1998)





## விடைபெறுதல் இல்லாத பிரிவுகள்

உள்ளத்துள் கிடந்து
குமைந்து மறுகி
கசக்கிப் பிழிகிறது உன் நினைவு
கடைசிச் சந்திப்பை
நினைவென
வலிந்து முயன்றதில்
மெல்லிய திரையுடன் மங்கலாய்த்
தெளிவுறுகிறது உன் உருவம்.

சந்தித்த நிகழ்வு மட்டும்
தெளிவாக மிகத் தெளிவாக.
கணீரென்ற உனது குரலும்
சிரிப்பும்
இப்போதும் தொடர்ந்து ஒலிக்கிறது
என் செவிப்பறையில்.
நான்கு வருடங்கள் இருக்குமா
உன்னை நான் பார்த்து!

பூமாலைகளுடனும் பூக்களுடனும்
உற்றவர் புடை சூழ
மிகவும் மாறிப்போயிருந்தது
உன் தோற்றம்.
ஆனால் என் செவிகளில் மட்டும்
உனது அதே குரல்.

கேட்பவர் மனதை உருகச் செய்த
அதே குரல்
இழைந்து குழைந்து
கசிந்துருகிக் கொண்டேயிருந்தது
ஒலிபெருக்கியூடாக.
உன்னுடன் பழகிய நாட்களின்
நினைவில்
கண்களைத் திரையிட்டது நீர்ப்படலம்.

நண்ப, நீ எப்போதுமே
இயல்பானவன், சிறப்பானவன்
அதுபோலத்தான் உனது சாவும்
எமது தேசத்தில் இயல்பானது
கூடவே சிறப்பானது.
உனைப் பாராமலே கடந்துவிட்ட
பொழுதுகளும் வருடங்களும்
இப்போதுதான் நெருப்பைச் சொரிவதாய்
உள்ளத்தை உறுத்தி அரிக்கிறது.

எனது மிகுதி நட்புக்களையாவது
பிடி மண்ணுடனும் மலர்களுடனும்
சந்திக்க முன்
உயிருடன் முழுதாக ஒருமுறை
கண்டுவிட வேண்டுமெனச் சொல்வதாய்
நீ இப்போ.
தேற்ற முடியாத சோகத்துடன்
மாற்ற இயலாத பாரமொன்று
நீங்காமலேயே என் உளத்தில்!

தூயவள் (~1997)





## உன்னோடு ஒரு நிமிடம்

என்னரும் நண்ப
ஒரு கணம் நில்!
உனது விழிகளைப் பார்க்கையில்
பின்னப் பின்ன
நடைபோடும் உனது
கால்களைப் பார்க்கையில்
என்னைத் தெரிகிறது
முன்னர் ஒருபோதில்
நானிருந்த நிலை தெரிகிறது

நண்ப, எனது குரல்
உனக்குக் கேட்கிறதா?
நான்தான்,
உனக்கருகே இப்போதுள்ள
புதைகுழியுள்ளிருந்து பேசுகிறேன்
உற்றுக் கவனி
இன்னும் பல குரல்கள்
உனக்கும் கேட்கும்
எல்லோருமே ஏதோ
ஒவ்வொரு இரவுகளில்

செத்தும்
சாகப் போகின்ற நிலையிலும்
கொணர்ந்து புதைக்கப்பட்டவர்கள் தாம்
ஒவ்வொரு புதைகுழியுமிங்கே
ஓராயிரம் கதை சொல்லும்

ஒன்றை மட்டும் நீ உணர்
அமைதி நகரென்ற போர்வையில்
நீ இங்கு வர நிர்ப்பந்திக்கப்பட்டவன்
உண்மையென நம்பியும்
வந்திருக்கலாம், தவறில்லை.
எனினும்
வந்த பின்னர் மூடுதிரைகளற்று
முழு உருவம் புரிந்த பின்னும்
இது என்ன விழியோரப் பயமும்
தடைமுகாம் தோறும்
கால் பின்னும் நடையும்?

அவனைக் கண்டு
உனக்கென்ன பயம்?
பயந்து பயந்து திரிந்தால்
என்னருகில் ஓர் இடம்
உனக்கும் கிடைக்கலாம்
என்ன பயம்?
யாரென இனங்காணப்படாமலே
பூமியினுள் புதைந்தென்ன இலாபம்
இன்னும் தயங்காதே,
என்னைப் போல் புதையாதே!

தூயவள் (~1998)





## சோத்தரிசி

அந்த நாட்களை
எண்ணிப் பார்க்கிறேன்
நிச்சயமாக அவை இன்பமானவை
வேறேதும் தெரியாத புரியாத
வேதனையே அறியாத
வயதும் மனதும்.

எதிலுமே அக்கறையற்றுத் திரிந்த
பார்ப்பவை எல்லாமே
மகிழ்ச்சியைத் தோற்றுவித்த
அந்த விடலைப் பருவம்.
தோட்டத்தில் பயிர் செய்யும்
எம்மவரைப் பார்த்து
வந்த நாட்டத்தினால்
தம்பியோடு கூடி
சோத்தரிசி தன்னை
நிலம் கிண்டி விதைத்து விட்டு
முளைக்குமென்று காத்திருந்த
விளைவினைப் பற்றி
கனவுகள் கண்டிருந்த
கவலையற்ற அந்த நாட்கள்.

அந்த நாட்கள்
அழகானவை, இனிமையானவை.

இப்போதும் கூட
பெரியளவில் வயல் செய்ய
ஆசை கொண்டு
முளைக்குமென்ற நினைவோடு
விதைத்து விட்டுக்
காத்திருக்கிறேன்.
காத்திருக்கையில்
மெல்லியதாய் சந்தேகமொன்று
மனதினுள் முளைவிடும்,
ஒருவேளை இதுவும்
சோத்தரிசிதானோ என.

நான்
நன்றாகப் பார்த்துத் தானே
அதுவும்
ஓராயிரம் தடவைகள் சிந்தித்து
ஒருநூறு தடவைகள்
உறுதிப்படுத்தி
அதன்பின் அல்லவா விதைத்தேன்.
எப்படி பிழைப்பட்டுப் போகும்?

எப்படியும் முளைத்துவிடுமென
காத்திருக்கிறேன்.
சற்றே ஆழத்தில் புதைத்திருந்தாலும்
நாட்கள்
கடந்த பின்னாயினும்
முளைக்குமென்ற நம்பிக்கையுடன்
நான்!

தூயவள் (~1993)





## எனது வசந்தம்

வறண்டு கிடக்கும் என்
மனதின் வசந்தமே
நீ ஏன்
வந்து வந்து போகிறாய்?
வந்து வந்து போவதனால்
என்னுடைய கற்பனையும்
வந்து வந்து போகிறது

பெரும்பாலும்
மனது பாலையாகவே
வறண்டு கிடப்பதனால்
என்னுடைய கற்பனையும்
தாள்களும்
வறண்டேதான் கிடக்கின்றன
நீ ஏன்
வந்து வந்து போகவேண்டும்?
என்னுடைய வசந்தமே நீ
என்னுடனே தங்கிவிடு!

வெறுமையான தாள்களையெல்லாம்
எனது எழுதுகோலால்
உழுது விதைத்து
நிரப்பிவிடுகிறேன்.
என்னுடைய வசந்தமே நீ
வெறுமையான தாள்களுக்காக
இரங்கியேனும்
என்னுடனே தங்கிவிடு

விழிகளின் மொழியினில்
பல நூறு கதை பேசிவிட்டு
இன்று
இதழ்களை மூடியே
மொழிதனை மறந்து - என்னை
ஏன் பிரிந்து சென்றாய்?

என்னுடைய வசந்தமே
கண்களின் உறவாடலில்
எந்தன் மனம்
மொட்டு விரித்து
மலரத் தொடங்கியதும்
இறக்கை கட்டிப்
பறக்கத் தொடங்கியதுமான போதெல்லாம்
எனக்குத் தெரியாது இது
உதிர்வதற்கான மலரல் என்று,
விழுவதற்கான பறத்தல் என்று.

என்னுடைய வசந்தமே
எனது அழைப்பு
உன்னையும்
எட்டுதல் கூடுமென்றே நான்
எழுதுகிறேன், நம்புகிறேன்.

இன்னமும்
இந்த மனது
தனது வசந்தத்தை
எதிர்பார்த்தபடியே!

தூயவள் (~1993)





## அழைப்பு

எங்கள் கிராமம்
குடி இழந்து போகிறது
நெடிதுயர்ந்த பனைமரத் தோப்பிடையே
ஒற்றையாய்,
அவலமாய் எழுகின்ற
குக்குறுப்பானின் குரல்போல்
எங்கள் கிராமம்
நடு இரவுப் பொழுதுகளிலும்
நண்பகல் வேளையிலும்
அழுகின்றது.

அண்மையில் ஏதும் சண்டை,
இல்லை
இராணுவ முன்னேற்றம்,
அந்நிய தடங்கள்..?
ஒன்றுமே இல்லை.
அப்படியும்
எங்கள் கிராமம்
மெல்ல மெல்ல
குடி இழந்து போகிறது
உயிர்த்துடிப்பு அழிந்து போகிறது.

அந்நிய தேசப் பதிவுகளில்
இடமற்றோர் கணக்கில்
எண்ணிக்கையோ

குடும்பம் குடும்பமாக ஏறிக்கொண்டிருக்க
வசதி வாய்ப்புகள் நிறைந்த
எங்கள் கிராமம்
குடி இழந்து போகிறது
உயிர்த்துடிப்பு அழிந்து போகிறது
இந்த மண்
மெல்லியதாய் அழுவது
எனக்குக் கேட்கிறது
உங்களுக்கும் கேட்கிறதா?
மண்ணுடன் பற்று வைத்து
பாசமாக உறவாடிப் பேசிய
பழக்கம் இருப்பின்
கேட்கும்!

இராணுவ நடவடிக்கைகளால்
இடம் பெயர்வோரே
தயைகூர்ந்து எங்கள்
இடத்திற்கு வாருங்கள்
இருப்பினை இழந்தவர்களே
குடிகளை இழந்து கொண்டுள்ள
கிராமம்
உங்களை அழைக்கிறது
வாருங்கள்,
சின்னதாய் பாதம் பதிக்க.
ஓர் உயிர் இருக்குமட்டும்
அது உயிரிழந்து போகாது
தன் நிலையிழந்து போகாது
வாருங்கள்!

தூயவள் (~1993)





## விழிப்பு

சின்னஞ் சிறு வயதிலே
சிந்தை கனத்துப் போனதால்
வீறுகொண்டெழுந்து
வீர களம் புகுந்தவளே
என் சின்னத் தங்கையே
உன் முன்னிலையில்
குற்றவாளிக் கூண்டில்
குனிந்த தலையுடன் நான்.

குஞ்சுகளையும் எங்கள்
பிஞ்சுகளையும்
ஆயுதம் ஏந்தவிட்டு
ஆறுதலாக நாங்கள்...
வருகின்ற தலைமுறையைப்
பருவத்திற்கு முன்னரேயே
உதிர்த்துக் கலைத்துவிட்டு - இன்றும்
உல்லாசமாக நாங்கள்.

உலகத்தின் முதிர்வுகளை
உணர்ந்து கொண்ட பின்னும்
எனது உனது என்பதே
எண்ணமாகிப் போன
எங்களின் மத்தியிலே
தணியாத தாகமுடன்
தாயகத்தின் விடுதலைக்காய்
களம் காணப் புறப்பட்ட
கண்மணியே!
உந்தன் வீரத்தின் முன்
உறுதியான மனத்தின்முன்
குற்றவாளிக் கூண்டில்
குனிந்த தலையுடன் நான்.

அருமைத் தங்கையே - உனது
அந்த உணர்வுகளின் நிலைகள்
சுதந்திரத்தின் தேவைகள்
எல்லாமே எனக்குப் புரிந்தும்
எண்ணமதைச் செயற்படுத்தும்
துணிவு ஏதுமின்றி
சாட்டுக்கள் காரணங்கள்





தேடித் திரிந்ததும்
படிப்பென்றும் பின்னர்
பாட்டென்றும் ஓடித்திரிந்ததும்
ஒழுங்கையில் அலைந்ததும்...

இன்று உன்னால்
இதயத் தராசில் இடப்பட்டு
நியாயங்கள் புரிபட்டு
நிதர்சனமாகி
மனதிலே தெளிவு பிறந்தபடி என்
மனதிற்கு அடி கொடுத்து
என்னை விழித்தெழ வைத்த
என் சின்னத் தங்கையே!

நீ மட்டும் தனியே போராட
தீ வந்து என்னைச் சுட்டிடாதா?
தாயகம் மீட்டிட
தரணியில் நிமிர்ந்திட
உன் வழியில் ஊழித் தீயாகி
எம் இனத்தின் விடுதலைக்காய்
இன்றே புறப்படுகின்றேன்
இனிய சகோதரியே.
எங்கேனும் ஒரே களத்தில்
நாங்கள் சந்தித்துக் கொள்வோம்
அப்பொழுது
உன் அன்பு மனத்தில்
எழுந்த உணர்வுகளை
என்னிடம் நீ சொல்லி விடு!

தூயவள் (~1993)

## அந்நியன் பிடியில் எங்கள் கிராமம்

அன்றொரு நாள்
அமைதியான எங்கள் கிராமத்துள்
அடக்க முடியாத வெறியுடன்
அரக்க குணம் கொண்ட
அந்நியப் படையொன்று
ஆயுதங்களுடன் புகுந்திற்று.

அழகான அமைதியான
எங்கள் கிராமம்
ஐந்து மணிநேரத்தில்
ஆளரவமற்ற மயான பூமியானது.
எங்கு பார்த்தாலும்
அந்நியரின் காலடித் தடங்கள்
அவர்களது மொழியும்
இராணுவ வாகன உறுமலும்
ஒன்று போலவே.

வெகுதூரம் ஓடிவிட்ட நாம்
நடுநடுங்கியபடி
நான்கு நாட்கள் கழிந்தபின்
எங்கள் கிராமத்தை நாடி
வந்தபோது...

தெருக்களிலே ஆங்காங்கே
அரைகுறையாய்
எரிந்தபடி கிடந்த உடல்களை
காகங்கள்





கொத்திக் கொண்டிருந்தன.
வீடுகள் தமது
கூரைகளை சுவர்களை இழந்து
வெட்கிப்போய் நின்றுகொண்டிருந்தன
வீதிகள் எங்கும் பிணவாடை
தூரத்தில் ஒரு நாய்
ஊளையிட்டுக் கொண்டிருந்தது.

அழிந்து போனவை
எமது உடைமைகளல்ல
அந்நிய தேசத்தின் மானம்தான்
இறந்து கிடப்பவர்கள்
ஈழத் தமிழர்கள் அல்ல
இந்தியாவின் மனிதாபிமானமும்
ஜனநாயகமும் தான்.

எந்தப் பக்கம் திரும்பினாலும்
அழுகை...அழுகை...
அழுகை ஒலி கேட்டே
காதுகள் பழகிப் போயின.
எமது நெஞ்சம்
எரிந்து கிடந்த பிணங்களை
அழிந்து கிடந்த வீடுகளை
பார்த்து பயந்துவிடவில்லை.

இத்தனைக்கும்
பதில் சொல்ல வேண்டும்
எம்மால் இயன்றவரை
இறப்பதற்கு முன்னர்
ஓர் இந்திய ஆமியையாவது

அழிக்க வேண்டும் என்ற வெறி
கொழுந்து விட்டு எரிகிறது.
பிணங்களைக் கூட்டி எரித்தோம்
கூடவே எமது மனமும்
எரியவில்லை - ஆனால்
மனதில் ஓர் உறுதி
ஒரு சங்கற்பம் உருவாகிறது.

எமது தேசத்தை
எமது உடைமையை
எமது உரிமையை அடக்க நினைக்கும்
அழிக்க முயலும்
எவரையும் நாம்
விட்டுவைக்கப் போவதில்லை.
இது எமது தேசம்
இங்கு இருப்பது நம் உரிமை
இதில் யாருக்கும்
பங்கோ பாகமோ கிடையாது.

அட அந்நியனே!
உனது தேசத்தினை
அதன் அவலத்தினை
முதலில் மாற்று.
இங்கே நீ இருந்தது போதும்
இடத்தை மாற்று!

தூயவள்

*1988 இல் வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற இந்திய இராணுவத்தினரின் ஆகஸ்ட் 2,3 ஆம் திகதிய படுகொலைகள் தொடர்பாக எழுதப்பட்டது.*





*பின்னிணைப்பு*

*யாழ்ப்பாணம் மாணவர் ஒன்றியம் 31.10.1996 இல் வெளியிட்ட செம்மணி புதைகுழி பற்றிய துண்டுப்பிரசுரம் இது. போரின் கெடுபிடிகள் பெண்களின்மீது ஏவும் உடல்சார்ந்த, உளவியல்சார்ந்த கொடுஞ்சூழலை இக் கவிதைக்குள் நாம் தரிசிக்கிறோம். இத் தொகுப்பை மூடிவைக்கமுடியாத வெளியை அது உருவாக்குகிறது என்பதால் பின்னிணைப்பாக இங்கு சேர்க்கப்பட்டுள்ளது. - ஊடறு.*

## அமைதி நகரின் மன்னம்பெரிகள்

அழகிய மன்னம்பெரி
அவள் ஒரு போராளி
அவளை அவர்கள் பிடித்தனர்
ஒரு அழகியென்பதால்
அவளிடம் இரகசியங்கள் இருந்ததால்
அவளை அவர்கள் சிதைத்தனர்.
நிர்வாணமாக குறையுயிராக
தெருவிலே விட்டுச்சென்றனர்.

அழகிய மன்னம்பெரி
ஆனால் அவளைப்போல
அவளது மரணம் அழகானதேயல்ல.

அழகிய கிருஷாந்தி
இவளொரு போராளியல்ல
ஆனாலும்
அவளை அவர்கள் பிடித்தனர்
கைதடி வெளியெல்லாம்
அவள் கதறிய குரல் அலைய
அவளை அவர்கள்
பலமுறை சிதைத்தனர்.
பிறகு கழுத்தை நெரித்து
செம்மணியில் புதைத்தனர்
அவளைத் தேடிச்சென்ற
தாயை தம்பியை அயலவரை
எல்லோரையுமே
கழுத்தை நெரித்து
செம்மணியில் புதைத்தனர்

அழகிய ரஜனி
இவளும் ஒரு போராளியல்ல
ஆனாலும்
அவளை அவர்கள் பிடித்தனர்
யாருமில்லாத வீடொன்றின்
சுவர்களில்
அவள் அழுதகுரல்
மோதி அழிய
அவளை அவர்கள் சிதைத்தனர்
பிறகு





கழுத்தை நெரித்து ஒரு
மலக்கிடங்கில் புதைத்தனர்

ரஜனி,கிருஷாந்தி
இருவரும்
அமைதி நகரின் மன்னம்பெரிகள்.
விதவை அரசி
சொன்ன பொய்களின் பின்
சென்றார்கள்

அமைதி நகரம்
அவர்களின்
அழகை இளமையைக் கேட்டது
அதன் சாப இருளில்
பேய்கள்
பலம்மிகப் பெற்றெழுந்து
மன்னம்பெரிகளை தூக்கிச் செல்கின்றன.
மன்னம்பெரிகளுக்கு ஆபத்து
தனியாகப் போகும்
எல்லா அழகிய பெண்களுக்கும்
ஆபத்து.

மன்னம்பெரிகளின் கதறல்
அமைதி நகரெல்லாம் நிறைகிறதே
கைதடிவெளியே
செம்மணிவெளியே ஐயோ!
அமைதி நகரமே
அமைதி நகரமே
அருவருப்பானதொரு பொய்யே
உனக்கும் ஐயோ!

இதோ
சமாதானம்
அதன் மரண நெடியுடன்
ஒரு மாய வலையென
எமது நகரங்களின்மீது விழுகிறது

வருகிறார் விதவை அரசி
மன்னம்பெரி, வெண்தாமரை
இரண்டிலும் குருதி வடிய
அதே வசியச் சிரிப்பு
அதே வெறித்த விழிகள்
அதே முறிந்த வாக்குறுதிகள்.

வருகிறார் விதவை அரசி
கவனம்
அமைதிநகரின் மக்களே கவனம்
அழகிய எல்லா சிறு பெண்களும்
கவனம்
மன்னம்பெரிகளின் ஆவி
விரைவில்
விதவை அரசிகளைத் துரத்தும்
முன்பொரு விதவையின்
வெற்றிக்கொடி அறுந்து
மண்ணில் வீழ்ந்ததுபோலே
மன்னம்பெரிகளின் ஆவி எழும்.
அதுவரை
அமைதிநகரின் மக்களே கவனம்
அழகிய எல்லாப் பெண்களும்
கவனம்.





யாகத்தில் நிராகரிக்கப்பட்ட
சதிதேவியின் கோபத்தோடு
புல்மூடிய புதைகுழி நீத்து
எல்லா மன்னம்பெரிகளும்
எழுக!
அமைதி நகரம் அழைக்கிறது
அமைதி நகரம் அழைக்கிறது
அதன் வாசலிலே
கிருஷாந்தி
அமைதியுறா மனத்தினளாய்
அன்றொரு நாள்
ஊழிப்பெருநடனம் தோன்றக்
காரணமாயிருந்த சதிதேவியின்
விழிகளைப் பெற்று
கைதடி வெளியெலாமாகி
செம்மணி வெளியெலாமாகி
வாசலிலே கிருஷாந்தி.

(எழுதியவர் பெயர் தெரியவில்லை)

*மன்னம்பெரி : இவள் ஓர் அழகுராணி. ஜே.வி.பி போராளி. 1971 ஜே.வி.பி கிளர்ச்சியின்போது கைதுசெய்யப்பட்டு, கடுமையாக சிதைக்கப்பட்டு, வீதியால் ஊர்வலமாக இழுத்துச் செல்லப்பட்டு பின் சுட்டுக்கொல்லப்பட்டாள். அவள் சிதைத்துக் கொல்லப்பட்ட விதம் பின்னாளில் சிறிமாவோ ஆட்சிக்கெதிரான மேடைகளில் அதிகம் அதிகம் சொல்லப்பட்டது. மன்னம்பெரியின் ஆவி துரத்திச் சென்றது.*

*சதிதேவி : ஒரு புராணநாயகி. தட்சனின் மகள். தன் தந்தையை மீறி சிவபெருமானைத் திருமணம் செய்தாள். பிறகு தட்சன் யாகம் செய்தபோது சிவனார் எச்சரித்ததையும் மீறி அங்கு சென்றார். அங்கே யாகசாலையில் தந்தை தட்சனால் அவமதிக்கப்பட்டார். அதனால் தற்கொலை செய்து கொண்டார். இறந்த தன் மனைவியின் உடலை ஏந்தியபடி கோபமடைந்த சிவனார் ஆடியதே ஊழிப்பெருநடனம் எனப்படுகிறது.*

❍

இக் கவிதைகள் பெண் போராளிகளின் போர்க்காலக் கவிதைகள் என்ற ஒற்றைப் பரிமாணப் பார்வையுடைய அணுகுமுறையும், முன் அனுமானங்களும், மனத் தடைகளும், அவற்றின் விளைவாக நீளும் தட்டையான உரையாடல்களும் சலிப்பு மேவிடச் செய்பவை. ஏனெனில் இத் தொகுப்பில் உள்ள கவிதைகள் எம் வாசிப்பில் தோற்றுவிக்கும் அதிர்வுகள் போரியலையும், போரியலை தாண்டிய வெளிகளையும் தொட்டு, பன்முக -சமூக, அரசியல், இலக்கிய, பெண்ணிய- உரையாடல்களையே

இங்கு வேண்டி நிற்கின்றன.

❍

❍ பெண்போராளிகளின் கவிதைகள்



# கவிஞைகள் பற்றிய சிறுகுறிப்பு

## கப்டன் ஞானமதி

*இவர் ஓய்வேயில்லாத தன் களமுனை வாழ்வில் கண்டவை களையும், உணர்ந்தவைகளையும் கிடைக்கும் நேரங்களில் பதிவாக்கிக் கொண்டவர். ஒரு இளம் படைப்பாளி. 13.12.1999 அன்று ஓயாத அலைகள்-3 நடவடிக்கையின்போது வெற்றிலைக்கேணிப் பகுதியில் வீரமரணமடைந்தார்.*

## கப்டன் வானதி

*ஆனையிறவுச் சமரில் பெண் போரளிகள் குழு ஒன்றிற்கு தலைமை தாங்கிச் சென்றவர். ஆனையிறவு படைத்தளத்தின் ஒரு பகுதியான தடைமுகாம் மீதான தாக்குதலின் போது 11.07.1991 இல் வீரமரண மடைந்தார். இவரது கவிதைகள் "வானதியின் கவிதைகள்" தொகுப்பாக 1991 மார்கழியில் வெளிவந்திருந்தது.*

## கப்டன் கஸ்தூரி

*இவர் கவிஞை மட்டுமல்ல சிறுகதைகளும் எழுதியுள்ளார். நாடகங் களை எழுதி நெறிப்படுத்துவதிலும் ஈடுபட்டவர். இவர் ஆனையிறவுச் சமரில் விநியோகக் குழு ஒன்றிற்கு தலைமைதாங்கிச் சென்றார். இக் களத்தில் 11.7.1991 அன்று வீரமரணமடைந்தார். இவரின் கவிதைகள் "கஸ்தூரி கவிதைகள்' தொகுப்பாக வெளிவந்திருந்தது.*

❍ ஊடறு

### நாதினி

*1991 இல் ஆனையிறவுச் சமரின்போது 'எழுதாத என் கவிதை' என்ற -தன் இறுதி- கவிதையை கப்டன் வானதி எழுதிக் கொண்டிருந்தபோது அவர் அருகில் இருந்த போராளி நாதினி. 2000 ஆண்டில் ஆனையிறவுத் தளம் மீட்கப்பட்டபின் 'எழுதாத உன் கவிதை' என்ற கவிதையை வானதியை நினைவுகூர்ந்து எழுதினார். இதுவே இவரின் முதல் கவிதை*

### சிரஞ்சீவி

*இவர் ஒரு இலக்கிய விமர்சகர். அர்த்தநாரீ என்ற பெயரிலும் எழுதியிருக்கிறார்.*

### அம்புலி

*இவர் கவிதைகள் கட்டுரைகள் எழுதுவதுடன் காணொளி நிகழ்ச்சித் தயாரிப்பிலும் ஈடுபட்டவர். உதயலட்சுமி, அணங்கு, அரியாத்தை, மனுஷி, கங்கை, சாரங்கா என்ற பெயர்களிலும் எழுதியவர். இவரது கவிதைகள் "மீண்டும் துளிர்க்கும் வசந்தம்" தொகுப்பாக 2004 தை வெளிவந்திருந்தது.*

### ஆதிலட்சுமி

*இவர் சிறுகதைகள், கவிதைகள், வானொலி நாடகங்கள் என்பவற்றை எழுதியவர். இவரின் கவிதைகள் "என் கவிதை" தொகுப்பாக நவம்பர் 2000 இல் வெளிவந்திருந்தது.*

### அலையிசை

*இவர் கவிதை, சிறுகதை, வானொலி நாடகம் என படைப்பாக்கத்தில் ஈடுபட்டவர். விண்ணரசி என்ற பெயரிலும் எழுதியுள்ளார்.*

### அ.காந்தா

*இவர் கவிதை, சிறுகதை, வானொலி நாடகங்கள் எழுதியவர்.*





### கி.கிருபா

*இவர் கவிதைகள் மட்டுமன்றி அரங்க நாடகங்கள், நாடகப் பாடல்கள் என எழுதியவர்.*

### ஜெயா

*இவர் கவிதை, கட்டுரைகள் எழுதியுள்ளார். இசைப்பாடல் முயற்சியிலும் ஈடுபாடு காட்டியவர்.*

### மலைமகள்

*இவர் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என படைப்புகளை தந்துள்ளார். மலையமான்தேவி, நதி, மோகனா என்ற பெயர்களிலும் எழுதியுள்ளார்.*

### நாமகள்

*இவர் கவிதைகளுடன் சிறுகதைகளும் எழுதியுள்ளார்.*

### சுதாமதி

*இவர் கவிதைகளுடன் சிறுகதைகளும் எழுதியுள்ளார்.*

### தமிழவள்

*இவர் இசைப் பாடல்கள், கட்டுரைகள், சிறுகதைகள் எனவும் எழுதியுள்ளார்.*

### தூயவள்

*நிமிர்வு என்ற இவரின் கவிதைத் தொகுப்பு 1993 இல் வெளியாகியது.*

❍ ❍ ❍

பிற்குறிப்பு (2017)

“பெயரிடாத நட்சத்திரங்கள்” எனும் இக் கவிதைத் தொகுப்பானது ஊடறு-விடியல் இணைந்த வெளியீடாக 2011 இல் முதற் பதிப்பு வெளிவந்தது. பிரதிகள் மிச்சமின்றி அனைத்தும் விநியோகிக்கப்பட்டு விட்டதாலும் அதன் முக்கியத்துவம் கருதியும் இப்போ இரண்டாவது பதிப்பாக ஊடறு மீண்டும் வெளியிடுகிறது.

‘பெண்போராளிகள்’ என இத் தொகுப்பில் உள்ளடங்குபவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள். இந்தப் போராளிக் கவிஞைகள் எழுதிய கவிதைகள் இவை.

உண்மையில் பெண்போராளிகள் என்ற பொதுமைப்படுத்தல் எல்லா இயக்கங்களையும் உள்ளடக்கிய பரந்த தளத்தைக் கொண்டது. தமிழர் விடுதலைப் போராட்ட இயக்கங்கள் பலவற்றிலும் - எண்ணிக்கையில் குறைந்தாயினும்- பெண் போராளிகள் போராட்டத்தில் இணைந்து செயற்பட்டுள்ளனர். ஆரம்பத்தில் “பெண்களால் இரகசியங்களைக் காப்பாற்ற முடியாது” என்ற பொதுப்புத்தி உட்பட, பெண்கள் குறித்து ஆண்மேலாதிக்கம் கட்டமைத்து வைத்திருக்கிற பிம்பங்களை ஏற்றுக்கொண்டிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பானது பெண்களை இயக்கத்தில் இணைத்துக்கொள்ள முன்வராத காலத்திலேயே, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் போன்ற சக விடுதலை இயக்கங்கள் பெண்களை போராளிகளாக இணைத்துச் செயற்பட்டிருக்கின்றன. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை





முன்னணி மேற்கொண்ட காரைநகர் கடற்படை முகாம் மீதான தாக்குதலின்போது (1985 மே மாதம்) கொல்லப்பட்ட பெண்போராளி சோபா (மதிவதனி) ஈழவிடுதலைப் போராட்டக் களத்தில் வீரமரணம் எய்திய முதல் பெண் போராளி ஆவார் என்பது வரலாற்றில் பிசகின்றி பதியப்பட வேண்டியது.

அதேபோல், எந்த இயக்கத்தினதும் உறுப்பினராக இல்லாதபோதும் அரசியல் மற்றும் பெண்ணிய தளங்களில் இளம் செயற்பாட்டாளராக இருந்தவரும் விமர்சன அரசியலை முன்வைத்தவரும் அறியப்பட்ட கவிஞையுமான செல்வி 30.08.1991 அன்று விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு காணாமல் போனதையும் வரலாற்றில் அழுத்தமாக பதிந்தே ஆகவேண்டும். அவரது போராட்டக் குணம் அவரை ஒரு போராளியாகவே அடையாளம் காட்டி வைத்திருந்தது. அவருக்கு PEN அமைப்பின் Poetry International Award எனும் சர்வதேச விருது வழங்கப்பட்டது. ஆனால் அதைப் பெற அவர் உயிரோடு விட்டுவைக்கப்படவில்லை.

இன்னொரு சமூகப் போராளியும் அறியப்பட்ட கவிஞையுமான சிவரமணி 1991 இல் -தன்னிடம் எஞ்சியிருந்த கவிதைகளை எரியூட்டிவிட்டு- தற்கொலை செய்துகொண்டதையும் பொருத்தம் கருதி இங்கு பதிவுசெய்கிறோம்.

ஊடறு ஆ-ர் குழு.
றஞ்சி (சுவிஸ்)
ஆழியாள் (அவுஸ்திரேலியா)

❍

இந் நூலின் முதற்பதிப்பு 2011 இல் வெளிவந்தபின் அக்கறையுடன் விமர்சனங்கள் எழுதியவர்களுக்கும், நூல் வெளியீட்டு நிகழ்வை நடாத்தி ஊக்குவித்தவர்களுக்கும், பதிவுகளை வெளியிட்ட ஊடகங்களுக்கும் அதை எழுதியவர்களுக்கும் நன்றிகள். முன்வைக்கப்பட்ட விமர்சனங்களும், அறிமுகங்களும், நூல் வெளியீட்டு நிகழ்வுகளும் கீழுள்ள -ஊடறு இணையத்தள- இணைப்பில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

*http://www.oodaru.com/?p=7274*

This document was created with the Win2PDF “print to PDF” printer available at
http://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.

This page will not be added after purchasing Win2PDF.

http://www.win2pdf.com/purchase/